**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 9842 / 2013 / எம்சி. 8 நாள் : 24 .10.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - கூடுதல் நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் **25.10.2013** வெள்ளிக்கிழமை காலை **10.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கான கூடுதல் நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல்/

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - அக்டோபர் 2013

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | கல்விபிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு பாடவாரியாக வினா வங்கி அச்சிட்டு வழங்குதல் - தோராயமாக ரூ. 15.00 இலட்சம் மாநகராட்சி ஆரம்பக் கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | கல்விபிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் 10 -ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வு எழுதவுள்ள மாணவ / மாணவியருக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுவது – மாலை சிற்றுண்டி வழங்க நளன் உணவகத்திற்கு அனுமதி வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருல் - தொடர்பாக . |
| 3 | பொது சுகாதாரப் பிரிவு - சீத்தாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையை சிசேரியன் அறுவை சிகிச்சை மையமாக தரம் உயர்த்துதல் மற்றும் ரூ.30 இலட்சத்திற்குள் உபகரணம் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொது சுகாதாரப்பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி –- லாலிரோடு துணை மகப்பேறு மையத்தில் மதுஅடிமை மீட்பு மையம் தொடங்குதல் மற்றும் செயல் திட்டங்களுக்கு மாமன்ற அனுமதி கோருல் - தொடர்பாக. |
| 5 | பொது சுகாதாரப்பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர் நல மையங்கள் - பிரசவித்த தாய்மார்களுக்கு உணவுகள் வழங்குதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருல் - தொடர்பாக. |
| 6 | பொது சுகாதாரப்பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதார ஆய்வுக் கூடம் மண்டலத்திற்கு ஒன்று வீதம் தொடங்குதல் மற்றும் பணியாளர்களை Outsource மூலம் தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருல் - தொடர்பாக. |
| 7 | பொது சுகாதாரப் பிரிவு - நகர் நல மையங்கள் குடும்ப நல பணிக்கு தற்காலிகமாக 30 நகர சுகாதார செவிலியர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமித்தல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 8 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. டி. ஜெபரத்தினம், நகர சுகாதார செவிலியர், தெலுங்குபாளையம் நகர் நல அமையம் (பணிமாற்று அடிப்படையில் ரத்தினபுரி நகர் நல மையம் ) – பொள்ளாச்சி நகராட்சிக்கு மாறுதல் கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 9 | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – சென்ற ஆண்டில் தீபாவளிப் பண்டிகைக்கென தற்காலிக பட்டாசு கடை அமைக்க மாநகராட்சியால் தடையின்மைச் சான்று வழங்கியது போலவே இவ்வாண்டும் (2013) தற்காலிக பட்டாசு கடை அமைத்து விற்பனை செய்ய தடையின்மை சான்று வழங்குதல் - வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல்- தொடர்பாக |
| 10 | கல்வி பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியருக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் - செலவினங்களை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் சார்பாக |
| 11 | கல்வி பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சிப் பள்ளிகளில் PTA மூலம் நியமிக்கப்பட்ட முதுநிலை பட்டதாரி மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் வழங்குதல் - செலவினங்களை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் சார்பாக |
| 12 | கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி - மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவிகளுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குதல் - செலவினங்களை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் சார்பாக |

| | |
|---|---|
| 13 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.72 - நேரு ஸ்டேடியம் ரோடு - முனுசாமி கார்டன்ஸ் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒன்பது ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15சதவீதம் -ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்திற்கான கடைகளுக்கு பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 14 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.72 - நேரு ஸ்டேடியம் கோ-ஆப்டெக்ஸ் எதிரில் உள்ள மாநகராட்சி வணிக வளாக கடைகள் - மீன் வளர்ச்சி கழகம் - ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15சதவீதம் ,வாடகை உயர்வுடன் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 15 | குடிநீர் விநியோக பிரிவு - 70 கணினி விபர பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்வொர்க் இன்ஜினியர், ஒரு உதவி நெட்வொர்க் இன்ஜினியர் - ஒப்பந்த காலம் (செப்டம்பர் 2013 முதல் ஜனவரி 2014 வரை) பணி நீட்டிப்பு செய்தல் மற்றும் செலவினம் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 16 | நகரமைப்புப் பிரிவு - மத்திய மண்டலம் – நகரளவு வார்டு எண்.10, பிளாக் எண்.36, நகரளவு எண்.2211/2, தேவர் சிலை அமைக்க தடையின்மை சான்று அனுமதி கோருதல் – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக. |
| 17 | நகரமைப்புப் பிரிவு - ஆத்துப்பாலம் உக்கடம் சந்திப்பு முதல் ஒப்பணக்கார வீதிவரை உயர்மட்ட மேம்பாலம் கட்டுதல் - பழைய மீன்மார்க்கெட் பகுதியில் தூண்கள் மட்டும் கட்டுவதற்கு அனுமதி வழங்குதல் மற்றும் உக்கடம் பேருந்து நிலையத்திற்குட்ட இடத்தை நில ஆர்ஜிதம் செய்து நிபந்தனையுடன் நெடுஞ்சாலைத்துறைக்கு வழங்குதல் -அரசின் அனுமதி பெற மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 18 | நகரமைப்புப் பிரிவு - சத்தியமங்கலம் பிரதான சாலையில் சங்கனூர் சாலை சந்திப்பிலிருந்து (வேலன் தியேட்டர் முதல்) மணியகாரம்பாளையம் சாலை சந்திப்பு (சூர்யா மருத்துவமனை) வரை சாலையின் இரு பக்கமும் 10 அடி அகலத்திற்கு நில ஆர்ஜிதம் செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 19 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - குத்தகை இனம் - போத்தனூர் ரோடு லாரிப்பேட்டை நுழைவுக் கட்டணம் வசூல் செய்தல் - உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய ஏலதாரருக்கு உரிமம் ஒப்படைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | பொது சுகாதாரம்- சீத்தாலட்சுமி மகப்பேறு மருத்துவமனைக்கு சகல வசதிகளுடன் கூடிய ஸ்கேன் இயந்திரம் மற்றும் நுண்கதிர் இயந்திரம் வாங்குதல் - Radiologist மற்றும் நுண்கதிர் தொழில் நுட்பனர் வாடகை அடிப்படையில் பணிக்கு அமர்த்துதல் -செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 21 | பொது சுகாதாரம் - உக்கடம் கழிவுநீர் பண்ணையின் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெருநாய் கருத்தடை மையத்தில் கருத்தடை செய்யும் பணியை மேற்கொள்ளுதல் - M/s. People for Animals, கோவை நிறுவனத்தார் அனுமதி கோரியது – Memorandum of Understanding படிவத்தை செயலாளர், இந்திய பிராணிகள் நல வாரியம், சென்னை அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெறுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 22 | பொதுசுகாதாரம் - மாநகராட்சி நகர்நல மையங்களில் ஒப்பந்த அடிப்படையில் தி.ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ், பிரைவேட் லிட் கோவை நிறுவனத்தினர் மூலம் ஆயாக்கள், காவலர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் பணி மேற்கொள்ளுதல் - பணிக்காலம் 31.10.2013 உடன் நிறைவடைதல் - 2013 டிசம்பர் வரை நீட்டிப்பு செய்தல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 23 | பொதுசுகாதாரம் - மாநகராட்சி அனைத்து மண்டலங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் தி.ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ், பிரைவேட் லிட் கோவை நிறுவனத்தினர் மூலம் ஓட்டுநர்கள், துலக்குநர்கள் பணி மேற்கொள்ளுதல் - பணிக்காலம் 30.09.2013 உடன் நிறைவடைதல் - 2013 டிசம்பர் வரை நீட்டிப்பு செய்தல் - செலவினம் ஏற்றல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 24 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 38 - பீளமேடு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுதல் மற்றும் வார்டு எண் 73 நேரு பூங்காவில் அபிவிருத்திப் பணி செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 25 | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணி – குப்பை சேகரிப்புப் பணி – அனைத்து வார்டுகளிலும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - வார்டு ஒன்றுக்கு ரூ. 1.10 இலட்சம் மாநகராட்சி பொதுநிதியில் இருந்து செயல்படுத்தவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 26 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மண்டலத்திற்கு ஒரு பள்ளி வீதம் 5 பள்ளிகளுக்கு கணினி வழிக்கல்வி (E-Corp) வகுப்புகள் அமைத்தல் - மதிப்பீடு ரூ.50.15 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 27 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 24 – ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுதல் - மதிப்பீடு ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 28 | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 8 பிரதான சாலைகளுக்கு சர்வதேச தரத்துடன் மாதிரி சாலைகள் அமைத்தல் - விருப்பு கேட்பறிக்கை (EOI) கோர மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 29 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம்- வார்டு எண் 69-புலியகுளம் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய கடைகள் 2 – உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 30 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம்- வார்டு எண் 57-மசக்காளிபாளையம் ரோடு மாநகராட்சி புதிய வணிக வளாகக் கடைகள் - வாடகை மற்றும் வைப்புத்தொகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 31 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்திமிடம் - குத்தகைத்தொகை செலுத்தாரத உரிமதாரர் பெயரை கருப்புப் பட்டியலில் சேர்த்தல் - இனத்திற்கு மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 32 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் - 57க்குட்பட்ட சின்னசாமி லேஅவுட் பகுதியில் உள்ள வணிக வளாகக் கடைகள் - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 33 | வருவாய் பிரிவு -கிழக்கு மண்டலம்- வார்டுஎண் 64-ல் சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டமான அம்மா உணவகம் செயல்படுவதற்காக உணவகத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்து குத்தகை இனத்திலிருந்து மேற்படி இனத்தை நீக்கம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 34 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் வார்டு எண். 24 ரங்கே கவுடர் வீதியிலுள்ள நவீன மலர் அங்காடி வணிக வளாகத்தில் முன்புறம் காலியாக உள்ள தென் மேற்கு பகுதியில் உள்ள இடத்தினை – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பண்ணை பசுமை காய்கறித் திட்டம் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் ஆரம்பிக்க இலவசமாக இடம் ஒதுக்கீடு செய்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 35 | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண்.5-கவுண்டம்பாளையம் பிரிவு ஓணாப்பாளையம் சாலை அசோக்நகர் கிழக்கு பகுதியில் கட்டப்பட்டு வரும் கடைகள் - வாடகை நிர்ணயம் செய்து பொது / மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 36 | வருவாய் பிரிவு - தடாகம் ரோடு நவீன கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஒதுக்கீடு செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 37 | வருவாய் பிரிவு - மேட்டுப்பாளையம் ரோடு நவீன பேருந்து நிலையம் - பேருந்து நுழைவு கட்டணம் மற்றும் கட்டணக் கழிப்பிடம் - உரிமம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 38 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.71, வார்டு எண்.72 மற்றும் வார்டு எண்.50-ல் மாநகராட்சி வணிக வளாக கடைகள் -ளில் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 39 | வருவாய் பிரிவு - குத்தகை இனங்கள் -வருவாய் பிரிவு - அரசு ஆணையின்படி மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடுதல் - முதலாண்டு, இரண்டாண்டு முடிவுற்றது 5% உயர்வு செய்து அடுத்த ஆண்டிற்கு நீட்டிப்பு செய்தல் - நீட்டிப்பு செய்ய இயலாமல் ஒப்பந்ததாரர்கள் திரும்ப ஒப்படை செய்யப்படுதல் - புதிதாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்த்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 40 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 1க்கு உட்பட்ட துடியலூர் மேட்டுபாளையம் சாலையில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் - வாடகை நிர்ணயம் செய்து பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 41 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 01 துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் - உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரி ஏலதாரர்களுக்கு கடைகளை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 42 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர் தினசரி மார்க்கெட்டிற்கு வடபுறம் உள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் செயல்பட்டு வரும் உணவு விடுதி மற்றும் அருகில் உள்ள காலியிடம் உரிமம் புதுப்பித்து ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக |
| 43 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 -காய்கடை மைதானம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு நான்காவது முறையாக மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது - ஏலக்கோரிக்கை ஏற்று ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 44 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54 மற்றும் 82-ல் உள்ள பேருந்து நிலையங்களில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட் நிறுவனத்திற்கு ‘‘அம்மா மினரல் வாட்டர்’’ விநியோகம் செய்ய இடம் ஒதுக்கீடு செய்வது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 45 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 82 – மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் இந்தியன் வங்கி ATM மையம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 46 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.50- மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ராஜீ ரோடு (மேற்கு) முதல் தளம் - புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண்.8- மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 47 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.25 மத்திய மண்டலம் - பூமார்க்கெட் அருகில் மாநகராட்சி வணிக வளாகத்தில் முதல் தளத்தில் கடை எண்.4, 5 மற்றும் 6-க்கு வாடகை செலுத்தாத காரணத்தால் 31.07.2013- அன்று மாநகராட்சியால் பூட்டப்பட்டது. - உரிமைதாரர்கள் செலுத்திய தொகையை பறிமுதல் செய்து மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 48 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.25 மத்திய மண்டலம் - பூமார்க்கெட் அருகில் மாநகராட்சி வணிக வளாகத்தில் தரைதளத்தில் கடை எண்.2-க்கு வாடகை செலுத்தாத காரணத்தால் 31.07.2013- அன்று மாநகராட்சியால் பூட்டப்பட்டது. - உரிமைதாரர்கள் செலுத்திய தொகையை பறிமுதல் செய்து மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 49 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 செங்காடு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு நடைபெற்ற நான்காவது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - தொடர்பாக |
| 50 | நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம் – வார்டு எண்.57– உப்பிலிபாளையம் கிராமம் க.ச.எண்.75/3 மற்றும் 76/3 இட்டேரி புறம்போக்கு பகுதியில் வீட்டு மனை பட்டா வழங்க ஆட்சேபனையின்மை தெரிவித்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 51 | நகரமைப்பு - அவினாசி சாலை, திருச்சி சாலை மற்றும் மேட்டுப்பாளையம் சாலைகளில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரித்து அரசுக்கு பிரேரணை அனுப்புதல் மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் துறை, நெடுஞ்சாலைத் துறையை கேட்டு கொள்ளுதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 52 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 23 சர்சண்முகம் சாலை மற்றும் வார்டு எண் 24 ஆரோக்கியசாமி சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.9.2013-ல் நடைபெற்றது – உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 53 | பொது சுகாதாரம் – சுவர்ண ஜெயந்தி திட்டம் - நகர்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் 2012-13 தேர்வு செய்யப்பட்ட தகுதியுடைய பயனாளிகளின் பெயரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்ப்பது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 54 | பொது சுகாதாரம் –உதவித் தொகை – கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 55 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம்- வார்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு சிவானந்தா காலனி வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பண்ணை பசுமை காய்கறித் திட்டத்தினை செயல்படுத்த பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் ஆரம்பிக்க இலவசமாக இடம் ஒதுக்கீடு செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 56 | நகரமைப்பு பிரிவு - உதவி நகரமைப்பு அலுவலர்களுக்கு உதவியாக 5 வார்டுக்கு ஒரு நபர் வீதம் தொழில்நுட்ப உதவியாளர் ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பது – நகரமைப்பு பிரிவில் கட்டிட அனுமதி பணிகளுக்கும் நிர்வாக பணிகளுக்கும் கணினி பயிற்சி பெற்ற தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு தெரிந்த நபர்களை நியமனம் செய்வது – மண்டல வாரியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 57 | பொறியியல் பிரிவு - 10 அபிவிருத்திப் பணிகள் - ஒப்பந்தப்புள்ளி கோரியது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 58 | பொறியியல் பிரிவு - தமிழ்நாடு நர்புர வளர்ச்சித் திட்டம் (IUDM) சாலைப் பணிகள் - 4 சிப்பங்களின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரியது - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) திருக்குறள்**

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்.

**(குறள் - 665)**

**விளக்கம்**

துணிவாகச் செயலாற்றி மாண்புடைய புகழ் பெற்றவர்களின் திறமை, ஆட்சியாளர்களால் இனம்கண்டு போற்றப்படும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம் 1**

தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இலங்கையில் நடக்கும் காமன்வெல்த் மாநாட்டை, இந்தியா புறக்கணிக்க வேண்டும். இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்கும் வரை, காமன்வெல்த் மாநாட்டில் இருந்து இலங்கையை தற்காலிகமாக நீக்க வேண்டும் என்ற தனிநபர் தீர்மானத்தை தமிழக சட்டசபையில் கொண்டு வந்து எதிர்கட்சிகள், இந்திய தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும், கட்சி வேறுபாடின்றி ஒருமித்த குரலோடு தீர்மானத்தை ஆதரித்த நிலையில் ஏகமனதாக நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதில் மாமன்றம் பெருமகிழ்ச்சி அடைகின்றது என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 25.10.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் 2**

கோவை நகர வளர்ச்சிக்காகவும், போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காகவும் 11 திட்டச் சாலைகளை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாமன்றம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 25.10.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்கள் 89, 90, 91 ஆகிய பகுதிகளில் சுமார் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் புட்டுவிக்கி சாலையை நீண்ட காலமாக பயன்படுத்தி வருகிறார்கள். மழைக்காலங்களில் புட்டுவிக்கி தரைப்பாலத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் அந்தப் பகுதியில் போக்குவரத்து செல்ல முடியாமல் கோவை ஆத்துப்பாலம் வழியாக உக்கடம் செல்ல வேண்டியுள்ளது. இந்தபாதையில் செல்வதற்கு மாற்றுவழி இல்லாமல் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி இருந்தனர். இப்பாலத்தை அகலப்படுத்தவேண்டும் என்று நீண்டகாலமாக கோரிவந்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று புட்டுவிக்கியில் புதிய பாலத்தை கட்டவும், புறவழிச் சாலை அமைக்கவும், ரூ. 15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாநகராட்சி மக்களின் சார்பாக மாமன்றம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் தெற்கு மண்டலத் தலைவர் திரு எம். பெருமாள்சாமி அவர்களால் முன்மொழியப்பட்டு நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு தலைவர் திரு கே.என். செந்தில்குமார் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 3 நாள் 25.10.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் சுமார் 40 ஆயிரம் மின்விளக்குகள் உள்ளன. இந்த மின்விளக்குகளுக்கான மின்ஒயர்கள், கேபிள்கள் எல்லாம் போடப்பட்டு சுமார் 20, 25 ஆண்டு காலம் ஆகிவிட்டதால் மிகவும் பழுதடைந்து உள்ளன. அவற்றை மாற்றியமைத்தால்தான் மின்விளக்கு பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணமுடியும்.

மின்விளக்கு பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் மின்ஒயர்கள், கேபிள்கள், மின்விளக்குகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 23வது வார்டு உறுப்பினர் திருமதி எஸ். மணிமேகலை அவர்களால் முன்மொழியப்பட்டு 44வது வார்டு உறுப்பினர் திரு. ரா. வெண்தாமரைபாலு அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 4 நாள் 25.10.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் உள்ள தார்சாலைகள் மழைகாலங்களில் மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக மாறி விடுவதால் சாலை உபயோகிப்பாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றார்கள். எனவே பழுதடைந்துள்ள தார் சாலைகளை உடனடியாக சரிசெய்யும் பொருட்டு (பேட்ஜ் ஒர்க்) ஒட்டுப்போடுவதற்கு மண்டலத்திற்கு ஒரு குழு அமைத்து பழுதடைந்துள்ள சாலைகளை சரிசெய்ய வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் நியமனக்குழு உறுப்பினர் திரு மா. ராஜேந்திரன் அவர்களால் முன்மொழியப்பட்டு 62-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.எஸ். பாலன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 5 நாள் 25.10.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் 6**

மாநகராட்சி எல்லைக்குள் புற்றீசல்போல் முளைத்துவருகின்ற செல்போன் டவர்களை (Cellphone Tower) கட்டுப்படுத்துகின்ற வகையில், செல்போன் டவர்களை அமைப்பதற்கு கட்டிட அனுமதி, கட்டிட ஸ்தரத்தன்மை சான்று (Stability Certificate) -டன் மாநகராட்சிக்கு விண்ணப்பித்து முன் அனுமதி பெறவேண்டும்.

தனியார் இடத்தில் காலியிடவரி எதுவும் செலுத்தாமல் பொருட்காட்சி மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. இவ்வாறு தனியார் இடத்தில் மக்கள் மிக அதிகமாக சேருகின்ற வகையில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு மாநகராட்சியின் முன்அனுமதி பெறவேண்டும்.

வாகனங்களில் விளம்பரம் செய்வதற்கு மாநகராட்சியின் முன்அனுமதி பெறவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 44-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. ரா. வெண்தாமரைபாலு அவர்களால் முன்மொழியப்பட்டு நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு தலைவர் திரு கே.என். செந்தல்குமார் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 6 நாள் 25.10.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

# சிறப்பு தீர்மானம் – 7

தமிழகத்தை இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக, மாற்றுவதற்கு இரவும் பகலும் அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு கோயம்புத்தூர் மாநகராட்சியில் மக்கள் நலப் பணிகளை செயல்படுத்தி மாநகராட்சி சிறப்பாக நடத்தி செல்ல ஆசி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அம்மா அவர்களுக்கும், இரண்டு ஆண்டு காலம் தங்களது ஒத்துழைப்பையும், நல் ஆதரவையும் நல்கிய மாவட்ட அளவிலான மக்கள் பிரதிநிதிகளுக்கும் மாநகராட்சி ஆணையர், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி துணை மேயர், துணை ஆணையாளர், அனைத்து கட்சி அலுவலர்கள் , மாவட்ட அளவிலான அனைத்து அரசு துறை அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள், அனைத்து அமைப்பை சேர்ந்தவர்கள். மாநகர மக்கள், அனைத்து பத்திரிக்கை தொலைக்காட்சி குறிப்பாக நமது எம்.ஜி.ஆர். நாளிதழ், ஜெயா டி.வி உட்பட அனைவருக்கும் நன்றியையும், இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்களையும் மாமன்றம் தெரிவித்துக் கொள்கிறது. மாநகராட்சியின் இரண்டு ஆண்டு கால சாதனைகளை சிறப்பு மலராக வெளியிடுவதற்கு தானாக முன்வந்துள்ள மாலைமலர் நாளிதழுக்கு மாமன்றம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர்அவர்களால் கொண்டு வரப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 7 நாள் 25.10.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் 8**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் மாமன்ற உறுப்பினர்களுக்கு ஏதேனும் ஒரு மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை (Master Health Check up) செய்வதற்கு அனுமதிக்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு தலைவர் திரு கே.என். செந்தில்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டு வடக்கு மண்டல தலைவர் திரு.பி. ராஜ்குமார் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 8 நாள் 25.10.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 1

| | |
|---|---|
| பொருள் | நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு பாடவாரியாக வினா வங்கி அச்சிட்டு வழங்குதல் - சார்பு |

கோயம்புத்தூர் மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வருடந்தோறும் அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற மாணவ மாணவிகளை தயார் செய்யும் பொருட்டு பாடவாரியாக வினா வங்கி (Question Bank) அச்சிட்டு வழங்கவும், அதற்கென தோராயமாக ரூ. 15.00 இலட்சம் மாநகராட்சி ஆரம்பக் கல்வி நிதியிலிருந்து செலவிடவும், நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 5645/2013/கே 6

## மாநகர மன்ற தீர்மானம் எண் 209 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

| | |
|---|---|
| பொருள் | நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் 10 -ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வு எழுதவுள்ள மாணவ / மாணவியருக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுவது – மாலை சிற்றுண்டி வழங்க நளன் உணவகத்திற்கு அனுமதி வழங்குதல் – மாமன்ற அனுமதி கோருல் - சார்பு. |
| பார்வை | 1. கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மான எண். 15 நாள் 08.05.2013.<br>2. மாமன்ற தீர்மான எண்.64 நாள் 18.06.2013. |

மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மார்ச் / ஏப்ரல் 2013-ல் நடைபெறும் அரசு பொதுத் தேர்வுகளை எதிர் கொள்ள தயார் செய்யும் பொருட்டு பள்ளிகளில் மாலை நேர சிறப்பு வகுப்புகள் நடத்தப்படவுள்ளது. மாலை நேர சிறப்பு வகுப்புகள் துவங்குவதற்குமுன் மாணவ, மாணவியருக்கு சிற்றுண்டி வழங்க 2013-14 –ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதிநிலை அறிக்கையின்படி மேற்கூறப்பட்ட செலவினங்களை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள பார்வை 1 மற்றும் 2-ல் காண் தீர்மானங்களின்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாநகராட்சி மேல்நிலை / உயர்நிலைப்பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான மாலைநேர சிறப்பு வகுப்புகளின்போது மாலை நேரச் சிற்றுண்டி தயாரித்து வழங்க கோவை, இராமநாதபுரம் நளன் உணவகம் நிறுவனத்தினர் முன் வந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1. | மேற்படி நிறுவனத்தினர் மாலை சிற்றுண்டிக்கு<br>சுக்கு டீ 100 மி.லி<br>வல்லாரை சூப் 150 மி.லி.<br>தூதுவளை சூப் 150 மி.லி. | (ஏதேனும் ஒன்று ) |
| 2. | சோயா சுண்டல் 100 கி.<br>கருப்பு கொண்டை கடலை சுண்டல் 100 கி.<br>பாசிபயிறு சுண்டல் 85 கி. | (ஏதேனும் ஒன்று ) |
| 3. | ராகி புட்டு 100 கி.<br>மக்காச் சோளபுட்டு 100 கி.<br>அரிசி புட்டு 100 கி. | (ஏதேனும் ஒன்று ) |

**விநியோக முறை**

1. மொத்த பொருட்களை பள்ளிகளில் அளவிற்கு ஏற்ப தனித்தனியாக பிரித்து விநியோகம் செய்யப்படும்.
2. நேரம் பிற்பகல் 2.00 மணி முதல் 3.30 மணிக்குள் பள்ளிகளுக்கு அனுப்பப்படும்.

**விலை விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | ஏதேனும் ஒரு வகையான சூப் | ரூ. 25 |
| 2. | ஏதேனும் ஒரு வகையான சுண்டல் | |
| 3. | ஏதேனும் ஒரு வகையான புட்டு | |

என தெரிவித்துள்ளனர்.

எனவே மேற்படி உணவுகளை வேலை நாட்களில் தினம் ஒன்று வீதம் வழங்க நளன் உணவகத்திற்கு ஆணை வழங்க மாமன்ற அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க. எண். 3529/2013/கே 6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 210 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 20 நகர்நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் பிரசவிக்கும் தாய்மார்களின் எண்ணிக்கை மாதம் ஒன்றிற்கு சராசரியாக 82 ஆகும். இது நம் மாநகராட்சியில் பிரசவிக்கும் மொத்த தாய்மார்களில் 5% ஆகும். மீதமுள்ள 25% தாய்மார்கள் அரசு மருத்துவமனைகளிலும் 70% தனியார் மருத்துவமனைகளிலும் பிரசவிக்கின்றனர்.

இதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்கையில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிசேரியன் அறுவை சிகிச்சை வசதிகள் இருப்பதே என கண்டறியப்பட்டது. நமது மாநகராட்சியில் 6 மகப்பேறு மருத்துவமனைகள் ISO தரச் சான்று பெற்றுள்ளன. இவற்றில் அறுவை அரங்கு வசதிகள் உள்ளன. மகப்பேறு மருத்துவமனைகளில் பணியாற்றும் 6 பெண் மருத்துவர்கள் மகப்பேறு சிறப்பு பயிற்சி பெற்று DGO தகுதி சான்று பெற்றுள்ளனர். எனவே நமது மாநகராட்சியில் பிரசவிக்கும் தாய்மார்களின் எண்ணிக்கையை அதிகரிக்க கீழ்கண்ட முறைகளை பின்பற்றலாம்.

1. சீதாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையினை சிசேரியன் அறுவை சிகிச்சை மையமாக தரம் உயர்த்தலாம். இங்கு ஏற்கனவே இயங்கி வரும் அறுவை அரங்கு மற்றும் பரிசோதனை கூடத்தை மேம்படுத்தலாம்.

2. தனியார் மூலம் M.D(OG) தகுதி பெற்ற மருத்துவ அலுவலர் ஒருவரை ஒரு அறுவை சிகிச்சைக்கு ரூ 2000 /- என்ற அடிப்படையில் பணியமர்த்தலாம்.

3. மயக்க மருந்து வழங்க, மயக்கவியல் சிறப்பு மருத்துவரை ஒரு அறுவை சிகிச்சைக்கு ரூ 1000 /- என்ற அடிப்படையில் பணியமர்த்தலாம்.

4. பிறந்த குழந்தையின் நலம் காக்க, குழந்தைகள் நல மருத்துவரை ஒரு அறுவை சிகிச்சைக்கு ரூ 1000 /- என்ற அடிப்படையில் பணியமர்த்தலாம்.

5. அறுவை சிகிச்சைக்கு இரத்தம் தேவைப்படின் அருகில் உள்ள IMA இரத்த வங்கியில் பெற்றுக் கொள்ளலாம்.

6. DGO தகுதி பெற்ற மாநகராட்சி மருத்துவ அலுவலர்களை சுழற்சி முறையில் அறுவை சிகிச்சை செய்ய பணியமர்த்தலாம். இவர்களுக்கு கூடுதல் பணி தொகை ரூ 1000/- ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்கும் வழங்கலாம்.

7. நகர சுகாதார செவிலியர் மற்றும் தாய்சேய் நல அலுவலருக்கு கோவை அரசு மருத்துவ கல்லூரியில் அறுவை சிகிச்சை பயிற்சி அளிக்கலாம்.

8. இதற்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் இதர செலவினங்கள் ரூ.30 இலட்சத்திற்குள் மேற்கொள்ளலாம்.

முதல் முறையாக கோவை மாநகராட்சியில் சீதாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையினை சிசேரியன் அறுவை சிகிச்சை மையமாக தரம் உயர்த்தி பொது மக்களுக்கு சேவை செய்யவும் ரூ. 30 லட்சத்திற்குள் உபகரணங்கள் வாங்குவதற்கு சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண் 34 நாள்.10.102013-ல் அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, சீத்தாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையை சிசேரியன் அறுவை சிகிச்சை மையமாக தரம் உயர்த்தவும் மற்றும் ரூ.30 இலட்சத்திற்குள் உபகரணம் வாங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க. எண் :- 7905/2013/ எம்.இ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 211 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - லாலிரோடு துணை மகப்பேறு மையத்தில் - மதுப்பழக்கத்தை ஒழிக்கும் மையம் தொடங்குதல் - தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களில் பலர் மதுப்பழக்கத்திற்கு அடிமையாக இருக்கும் காரணத்தினால் அவர்களின் நலன் கருதி ஏற்கெனவே கோயம்புத்தூர் மாநகராட்சி லாலி ரோட்டில் உள்ள துணை மகப்பேறு மையத்தில் செயல்பட்டு வந்த மதுஅடிமை மீட்பு மையத்தை மீண்டும் துவக்க ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதை கீழ்க்கண்ட செயல் திட்டங்களை மேற்கொள்ளலாம்.

1. **கட்டிடம்:** மாநகராட்சி லாலி ரோட்டில் அமைந்துள்ள துணை மகப்பேறு மைய கட்டிடம் புதுப்பிக்கப்பட்டு மது அடிமை மீட்பு மையம் துவங்க தயார் நிலையில் உள்ளது.

2. **அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்:** மது அடிமை மீட்பு மையத்தில் பணிபுரிய இரண்டு மருத்துவ அலுவலர்கள், ஒரு துப்புரவு ஆய்வாளர், ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர், மூன்று மருந்தாளுநர்கள் மற்றும் நான்கு சுகாதார செவிலியர்கள் தேவை என்று தெரிவித்துள்ளார். தற்காலிகமாக பணிமாற்று அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

3. **உணவு:** மையத்தில் சிகிச்சைக்காக சேர்க்கப்படும் உள்நோயாளிகளுக்கு உணவுகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். உணவு வழங்க ஏற்கனவே ரூ. 15,000/- வழங்கப்பட்டுள்ளது போல தற்போதும் ரூ. 15,000/- நிலையான முன்பணம் வழங்கலாம்.

4. **மருந்துகள்:** மையத்திற்கு வரும் உள் மற்றும் புற நோயாளிகளுக்கு தேவையான மருந்துப் பொருட்களில் பெரும்பாலான மருந்துகள் TNMSC-ல் இல்லாததால், மன நல மருந்துவர் பி.பாலு அவர்களிடம் நோயாளிகளுக்கான மருந்துகளை வழங்கக் கோரலாம். ஒரு நோயாளிக்கு மருந்துக்கு சுமார் ரூ.1000/- செலவினமாகும். சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கைப்படி ஏற்படும் செலவினங்களை மரு.பாலு அவர்களுக்கு மாதாமாதம் பொது நிதியில் இருந்து வழங்கலாம்.

5. **ஆய்வகங்கள்:** மாநகராட்சி ஆய்வுக் கூடத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

6. **ஆம்புலன்ஸ்:** ஆம்புலன்ஸ் ஒன்று தேவை என்று தெரிவித்துள்ளார்கள். அவசரத் தேவைக்கு 108 ஆம்புலன்ஸ் SLM Home-ல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதைக் கேட்டுப் பெறலாம்.

7. **மேற்படி மையத்திற்கு தேவையான பதிவேடுகள், அனுமதி படிவங்கள்**, ஒப்புதல் படிவங்கள் மற்றும் அனைத்து படிவங்களையும் பதிவறை காப்பாளர் மூலம் அச்சிட்டு பெறலாம்.

8. **கட்டணம்:** இதற்கு முன்னர் இம்மையத்தில் சிகிச்சை பெற்ற ஒரு நோயாளிக்கு மருத்துவ கட்டணம் ரூ. 3700/-, மருந்துக்கட்டணம் ரூ. 1000/-, எக்ஸ்ரே கட்டணம் ரூ. 125/- ஆக மொத்தம் ரூ. 4825 வழங்கப்பபட்டது. தற்போது இம்மையத்தில் சிகிச்சை பெறும் நோயாளி ஒருவருக்கு மருத்துவர்கள் கட்டணம், மனநோய் வல்லுநர் கட்டணம், அறிவுரையாளர்கள் கட்டணம் என கட்டணத்தொகை ரூ.7000/- நிர்ணயம் செய்து இதற்கு அனுமதிக்கலாம்.

மேற்படி லாலிரோடு துணை மகப்பேறு மையத்தில், மதுப்பழக்கத்தை ஒழிக்கும் மையத்தை ஆரம்பிப்பது தொடர்பாகவும் மற்றும் மேற்கண்ட செயல்திட்டங்களுக்கு சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண். 32 நாள்.10.10.2013ல் அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, மேற்படி லாலி ரோடு துணை மகப்பேறு மையத்தில், மதுப்பழக்கத்தை ஒழிக்கும் மையத்தை ஆரம்பிப்பது தொடர்பாகவும் மற்றும் மேற்கண்ட செயல்திட்டங்களுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க. எண் :- 14181 / 2013/ எம்.இ.5

## மாநகர மன்ற தீர்மானம் எண் 212 நாள் 25.10.2013

சுகாதாரக் குழு தீர்மானம் எண் 32 நாள் 10.10.2013 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

பொருள் :- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர் நல மையங்கள் - பிரசவித்த தாய்மார்களுக்கு உணவுகள் வழங்க அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 20 நகர் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றது. அவற்றில் கே.கே.புதூர் நகர் நல மையம் தவிர அனைத்து நகர் நல மையங்களிலும் பிரசவம் பார்க்கப்படுகிறது. பிரசவித்த தாய்மார்களுக்கு 3 நாட்களுக்கு பால் மற்றும் ரொட்டி இலவசமாக வழங்கப்படுகிறது.

ஆய்வுக் கூட்டத்தில் பெண் மருத்துவ அலுவலர்கள் பிரசவித்த தாய்மார்களுக்கு முட்டையும் சேர்த்து வழங்கும்படி ஆணையாளர்களிடம் தெரிவித்தார்கள்.

முட்டை வழங்குவதால் ஏற்படும் செலவினம் பின்வருமாறு

| | |
|---|---|
| மொத்த நகர் நல மையங்கள் | 20 |
| தற்போது பிரசவம் நடைபெற்று வரும் நகர் நல மையங்கள். (கே.கே.புதூர் நகர் நல மையத்திலும் புதிய கட்டிடம் திறந்த பின் பிரசவம் பார்க்கப்படும்) | 19 |
| 2012-13ம் ஆண்டு நடந்துள்ள பிரசவம் | 1090 |
| 2013-14 ம் ஆண்டு ஜுலை வரை நடந்துள்ள பிரசவம் | 307 |
| 2012-13ல் சராசரியாக மாதம் ஒன்றுக்கு | 91 |
| 2013-14ல் எதிர்பார்க்கும் பிரசவங்கள் (மாதமொன்றுக்கு) | 100 |
| 1 முட்டை விலை | ரூ.3.50/- |
| எனவே, மாதம் ஒன்றுக்கு ஆகும் செலவு (100x 3x 3.50) | ரூ.1050/- |
| ஆண்டுக்கு எதிர்பார்க்கும் செலவீனம் (12 x1050) | ரூ.12,600/- |

எனவே, மாநகராட்சி நகர் நல மையங்களில் நலிவடைந்த பிரிவினரே பிரசவத்திற்கு வருவதாலும், அவர்களின் பொருளாதார நிலமையைக் கருத்தில் கொண்டும், பிரசவித்த தாய்மார்களின் உடல் நலன் கருதியும் பால், ரொட்டி ஆகியவற்றுடன் முட்டையும் சேர்த்து வழங்க சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண். 26 நாள்.10.10.2013ல் அனுமதி வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இம்மாநகராட்சியில் பிரசவங்கள் அதிகமான எண்ணிக்கையில் நடைபெறவும் மற்றும் பிரசவிக்கும் தாய்மார்களின் உடல் ஆரோக்கியமாக இருக்கும் வண்ணம் கீழ்க்கண்டபடி அனைத்து நகர் நல மையங்களில் உணவு வசதிகளை செய்து கொடுக்கலாமென சுகாதார நிலைக்குழுவில் முடிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| காலை | ரொட்டி 1/ 2 பாக்கெட்<br>பால் 1 கப் (250ml) |
| மதியம் | அரிசி சாதம்<br>பொரியல், கீரை<br>சாம்பார்<br>முட்டை/ சுண்டல்<br>ரசம்<br>தயிர் |
| இரவு | 3 இட்லி<br>சாம்பார்<br>பழம்<br>பால் 1 கப் (250ml) |

நகர் நல மையங்களில் 1 மாதத்திற்கு சுமார் 82 பிரசவங்கள் நடைபெறுகிறது. மேற்கண்டபடி உணவுகள் வழங்க 1 தாய்மாருக்கு நாளொன்றிக்கு ரூ.140 வீதம் 3 நாட்களுக்கு ரூ.420/- ம், 1 வருட காலத்திற்கு ரூ. 4,13,280/-செலவினமாகும்.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ளபடி பிரசவித்த தாய்மார்களுக்கு காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கவும், இதற்கான ஓராண்டு செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண் :- 271/ 2013/ எம்.இ.2

## மாநகர மன்ற தீர்மானம் எண் 213 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண் 6

பொருள் :- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதார ஆய்வுக் கூடம் மண்டலத்திற்கு ஒன்று வீதம் தொடங்குதல் - தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவின்கீழ், பொதுமக்களுக்கு சுகாதார ஆய்வுக் கூடம் ஒன்று எஸ்.எல்.எம்.ஹோம் நகர் நல மைய வளாகத்தில் 1953ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. அந்த சோதனைக் கூடத்தில் கீழ்க்கண்ட பரிசோதனைகள் இலவசமாக செய்து கொடுக்கப்படுகிறது.

1) Blood Test
2) Urine Test
3) Sputum Test
4) Semen Analysis
5) Smear for Malaria and Filaria
6) Vaginal Smear for Sexually Transmitted Diseases
7) Blood Bio-Chemistry.

மேலும், ரூ.40/- கட்டணத்தில் மருத்துவ அலுவலர்கள் பரிந்துரைக்கப்படும் நோயாளிகளுக்கு ECG Test ம் செய்து கொடுக்கும் வசதி உள்ளது.

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லை விரிவடைந்து 16 லட்சம் மக்கள் தொகையுடன் உள்ளது. மக்கள் தொகை வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 2 முதல் 5 சதம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. மேலும், இன்றைய சுற்றுப்புற சூழ்நிலை உணவுப் பழக்கங்கள், இயற்கை சூழ்நிலை காரணமாக பல வகையான நோய்களுக்கு பொது மக்கள் ஆளாகின்றனர். மேலும் வாழ்க்கை முறை காரணமாக புதிய புதிய நோய்களுக்கு ஆளாகின்றனர். (உதாரணமாக எய்ட்ஸ், சிக்கன் குனியா, டெங்கு போன்றவை ) .

இந்த நோய்களுக்காக மருத்துவர்களிடம் சென்றாலும், அவர்கள் உடனடியாக தனியார் ஆய்வுக் கூடங்களுக்கு சென்று ரத்தப்பரிசோதனை போன்ற சோதனை செய்து கொண்டு வருமாறு தெரிவிக்கும் போது அந்த பரிசோதனைகளுக்காக அதிகம் செலவிட வேண்டியுள்ளது. பொது மக்களுக்கு உதவுவதற்காகவும், அவர்கள் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் வகையிலும், அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே இந்த இலவசப் பரிசோதனை அமையவும், கோயம்புத்தூர் மாநகராட்சியின் 5 மண்டலங்களிலும் தலா ஒன்று வீதம் இந்த பரிசோதனைக் கூடம் அமைந்தால் பொது மக்களுக்கு மிகுந்த பயனளிக்கும்.

மண்டலம் ஒன்றிற்கு ஒன்று வீதம் 5 பொது சுகாதார ஆய்வுக்கூடங்கள் அமைத்திடவும் மற்றும் இதற்கான பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் Outsource மூலமாக தற்காலிகமாக பணி அமர்த்திக் கொள்ளவும் சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண். 27 நாள். 10.10.2013-ல் அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, மண்டலம் ஒன்றிற்கு ஒன்று வீதம் 5 பொது சுகாதார ஆய்வுக்கூடங்கள் அமைத்திடவும் மற்றும் இதற்கான பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் Outsource மூலமாக தற்காலிகமாக பணி அமர்த்திக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண் :- 8016 / 2013/ எம்.இ.2

## மாநகர மன்ற தீர்மானம் எண் 214 நாள் 25.10.2013

சுகாதாரக் குழு தீர்மானம் எண் 27 நாள் 10.10.2013ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

பொருள் :- பொது சுகாதாரப் பிரிவு - நகர் நல மையங்கள் குடும்ப நல பணிக்கு தற்காலிகமாக 30 நகர சுகாதார செவிலியர்களை தனியார் மூலம் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமித்தல் - தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி குடும்ப நலத்துறையில் 20 நகர் நல மையங்களுக்கு நகர சுகாதார செவிலியர்கள் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் 158 ஆகும். இதில் தற்போது 100 நகர சுகாதார செவிலியர்கள் மட்டுமே பணிபுரிகிறார்கள். பணி ஓய்வு மற்றும் மாறுதல் காரணங்களால் 58 இடங்கள் தற்போது காலியாக உள்ளது. பணியிடங்களை நிரப்ப அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவசர அவசியத்தினை முன்னிட்டு, காலிப் பணியிடங்களை நேரடி பணி நியமனம் மூலம் நிரப்பும் வரை, 30 நபர்களை நகர சுகாதார செவிலியர்களாக தனியார் ஒப்பந்தம் மூலம் நியமிக்க முடிவு செய்யப்பட்டது. சுகாதார செவிலியர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் இல்லை.

TNHSP ' மூலம் அனைத்து மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் NCD திட்டத்திற்கு தேவையான செவிலியர்கள் வழங்கிட ஏகம் பவுண்டேஷன் (EKAM Foundation) அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் நபர் ஒன்றுக்கு தோராயமாக ரூ.7,827/- சம்பளம் வீதம் வழங்கி வருகின்றனர். எனவே, 30 நகர சுகாதார செவியர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.7,000/- வீதம் செலுத்த ஆகும் செலவினம் ரூ.2.10 லட்சம் ஆகும். ஓராண்டிற்கு ரூ.25.20 லட்சம் செலவினம் ஆகும்.

30 நகர சுகாதார செவிலியர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் தேர்ந்தெடுக்கவும், இதற்கான உத்தேச செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.2.10 லட்சம் வீதம் ஓராண்டுக்கு அனுமதி வழங்கவும் சுகாதார நிலைக்குழு தனது தீர்மான எண். 29 நாள்.10.10.2013-ல் அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, 30 நகர சுகாதார செவிலியர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் தேர்ந்தெடுக்க காலதாமதம் ஆகும் என்பதால், அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி வைப்பதற்கும், இதற்கான உத்தேச செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.2.10 லட்சம் வீதம் ஓராண்டு செலவினத்திற்கும் பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண் :- 692/ 2013/ எம்.இ.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 215 நாள் 25.10.2013**

சுகாதாரக் குழு தீர்மானம் எண் 29 நாள் 10.10.2013ஐ ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

| | |
|---|---|
| பொருள் | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. டி. ஜெபரத்தினம், நகர சுகாதார செவிலியர், தெலுங்குபாளையம் நகர் நல அமையம் (பணிமாற்று அடிப்படையில் ரத்தினபுரி நகர் நல மையம் ) – பொள்ளாச்சி நகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெலுங்குபாளையம் நகர்நல அமையத்தில் (பணிமாற்று அடிப்படையில் ரத்தினபுரி நகர்நல மையம்) நகர சுகாதார செவிலியராக பணிபுரியும் திருமதி. டி. ஜெபரத்தினம் அவர்கள் தனது குடும்பம் பொள்ளாச்சியில் வசிப்பதால் தனது வயதான மாமியார் மற்றும் மாமனாரை கவனிக்க வேண்டியுள்ளதாகவும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு பொள்ளாச்சி நகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணபித்துள்ளார்.

எனவே, திருமதி. ஜெபரத்தினம், நகர சுகாதார செவிலியரை பொள்ளாச்சி நகராட்சியில் நகர சுகாதார செவிலியர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், பொள்ளாச்சி நகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 10193/2013/எம்சி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 216 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

பொருள் :- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – 2013-ம் வருடம் தீபாவளிப் பண்டிகைக்காக தற்காலிக பட்டாசு கடைகள் அமைத்து விற்பனை செய்ய மாநகராட்சி மூலம் தடையின்மைச் சான்று வழங்குவது - தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற சிறப்பு தீர்மானம் எண்.3, நாள்.24.07.2013ன்படி , கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள திருமண மண்டபங்கள் மற்றும் இட நெருக்கடியான பகுதிகளில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பட்டாசு கடைகள் வைத்து நடத்தப்படுவதால் கூட்ட நெரிசலும், போக்குவரத்துக்கு இடையூறும் ஏற்படும். மேலும், தீ விபத்து ஏற்படும் அபாயமும் உள்ளதை கருத்தில் கொண்டு இதனைத் தவிர்க்கும் பொருட்டு சென்னை மாநகராட்சியில் தீவுத்திடலில் தற்காலிக பட்டாசுக் கடைகள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதைப் போல், கோயம்புத்தூர் மாநகராட்சி வ.உ.சி. பூங்கா மைதானத்தில் சட்ட விதிகளுக்குட்பட்டு பட்டாசு கடைகள் வைத்து நடத்திக் கொள்ள அனுமதிக்கலாமெனவும், மேலும், மாநகராட்சியின் ஐந்து மண்டலங்களிலும் எந்தெந்த இடங்களில் இதுபோன்ற கடைகள் வைக்கலாம் என்பதை அனுமதிக்கும் அதிகாரம் அளிக்க மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி பொருள் தொடர்பாக கருத்துரை வழங்க 12.08.2013 அன்று காவல் துறை ஆணையர் கோவை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் நாளது தேதி வரையும் காவல் துறை ஆணையர் கோவை அவர்களிடமிருந்து பதில் ஏதும் பெறப்படவில்லை. மேலும், இவ்வாண்டும் காவல் துறை ஆணையர் அலுவலகத்திலிருந்து 306 விண்ணப்பப்படிவங்களுக்கு தடையின்மை சான்றுகளை அனுப்பி வைக்குமாறு 27.09.2013 அன்று அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்கள்.

எனவே, சென்ற ஆண்டில் தீபாவளிப் பண்டிகைக்கென தற்காலிக பட்டாசு கடை அமைக்க மாநகராட்சியால் தடையின்மைச் சான்று வழங்கியது போலவே இவ்வாண்டும் (2013) தற்காலிக பட்டாசு கடை அமைத்து விற்பனை செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் 08.10.2013 அன்று வழங்கப்பட்ட முன்அனுமதிக்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.6913 /2013 /எம்.இ.8

**மாநகர மன்ற தீர்மானம் எண் 217 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

பொருள் நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியருக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்த - நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் - சார்பாக.

…..

கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியரது விளையாட்டு திறனை ஊக்குவிக்கும் விதமாக மாநகராட்சிப் பள்ளிகளுக்கிடையே மாணவ, மாணவியருக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக, பள்ளி மாணவ மாணவிகளில் 14 வயதுக்குட்பட்ட ( 6 - 8 வகுப்புகள் ), 17 வயதுக்குட்டவர்கள் (9 -10 வகுப்புகள்) மற்றும் 19 வயதுக்குட்பட்டவர்கள் (11 -12-ம் வகுப்புகள்) என மூன்று பிரிவுகளாக பிரித்து குழுப்போட்டிகள் மற்றும் தடகள போட்டிகள் நடத்தவும், குழுப்போட்டிகள் மூன்று பிரிவுகளுக்கு மூன்று போட்டிகளும், தடகள போட்டிகள் மூன்று பிரிவுகளுக்கு இரண்டு ஓட்டப் போட்டிகளும் (Track events), இரண்டு களப்போட்டிகளும் (field events), ஒரு தொடர் ஓட்டப் போட்டியும் (4X100Mts relay) ஆக ஐந்து போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்காண் குழு போட்டிகள் மற்றும் தடகளப் போட்டிகள் நடத்தவும், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு சான்றிதழ்களும் மற்றும் கோப்பைகளும், ஒட்டுமொத்தமாக அதிக புள்ளிகள் பெற்ற பள்ளிக்கு சுழற்கோப்பை வழங்கவும் ஏற்படும் செலவினங்களை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க. எண். 9131/2013/கே9

**மாநகர மன்ற தீர்மானம் எண் 218 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் மாநில, தேசிய, ஆசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாநகராட்சி நிதியிலிருந்து செலவினத்தொகை வழங்கவும் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்கள் சென்னை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நியமிக்கப்பட வேண்டியவையாகும். தற்போது வரை மேற்படி பணியிடங்கள் நிரப்பப்படாததால், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு (PTA மூலம்) ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தில் 18 ஆசிரியர்களும், பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தில் 12 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு மொத்தம் 30 பேர் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட (PTA மூலம்) ஆசிரியர்களுக்கு, பிரதிமாதம் ரூ.7000/-வீதம் 18 ஆசிரியர்களுக்கு 7 மாதங்களுக்கு (இந்நிதியாண்டிற்கு செப்டம்பர் 2013 முதல் மார்ச் 2014 வரை) ரூ.8,82,000/-ம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பிரதிமாதம் ரூ.5000/-வீதம் 12 ஆசிரியர்களுக்கு 7 மாதங்களுக்கு (இந்நிதியாண்டிற்கு செப்டம்பர் 2013 முதல் மார்ச் 2014 வரை) ரூ.4,20,000/-ம் ஆக மொத்தம் ரூ.13,02,000/- செலவினமாகும். இத்தொகையினை ஒவ்வொரு மாதமும் சாதல்வார் பட்டியலிட்டு, சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு பெற்று வழங்க அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்காண் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ள மாத ஊதியத்தினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்ற பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டு கல்விக்குழு தீர்மான எண். 24 நாள். 27.09.2013-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட (PTA மூலம்) ஆசிரியர்களுக்கு, பிரதிமாதம் ரூ.7000/-வீதம் 18 ஆசிரியர்களுக்கு 7 மாதங்களுக்கு (இந்நிதியாண்டிற்கு செப்டம்பர் 2013 முதல் மார்ச் 2014 வரை) ரூ.8,82,000/-ம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பிரதிமாதம் ரூ.5000/-வீதம் 12 ஆசிரியர்களுக்கு 7 மாதங்களுக்கு (இந்நிதியாண்டிற்கு செப்டம்பர் 2013 முதல் மார்ச் 2014 வரை) ரூ.4,20,000/-ம் ஆக மொத்தம் ரூ.13,02,000/- செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- மாணவர்களின் நலன் கருதி ஏற்கனவே செப்டம்பர் 2013 முதல் (PTA) மூலம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருவதால் பின்னேற்புடன் ஒப்புதல் அளிக்கலாம்.

எண். 5790/2013/ கே 7

**மாநகர மன்ற தீர்மானம் எண் 219 நாள் 25.10.2013**

கல்வி,பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 24 நாள் 27.09.2013ஐ ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 12

பொருள் : நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி - மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவிகளுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குதல் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்பித்தல் - தொடர்பாக

பார்வை : கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மான எண். 23 நாள் 27.09.2013.

....

கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் 83 பள்ளிகள் இயங்கி வருகின்றன. 31.07.2013-ம் நாளின்படி மொத்தம் 22,389 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். மேற்கண்ட எண்ணிக்கையுள்ள மாணவ, மாணவிகளுக்கு 2013-2014-ம் கல்வியாண்டில் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.8,50,000/- ஆகும்.

எனவே மாநகராட்சிப் பள்ளிகளில் 2013-2014-ம் கல்வியாண்டில் பயிலும் மாணவ, மாணவியருக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குதல் சார்ந்தும், அதற்குரிய செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி மாமன்ற பொருள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண். 7670/2013/கே6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 220 நாள் 25.10.2013**

கல்வி,பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மானம் எண் 23 நாள் 27.09.2013ஐ ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.72 நேரு ஸ்டேடியம் ரோடு - முனுசாமி கார்டன்ஸ் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - ஒன்பது ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15சதவீதம் -ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்திற்கான கடைகளுக்கு பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129நாள்.22.10.2012.
4) வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள்.04.01.2013.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.
2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72 நேரு ஸ்டேடியம் ரோடு முனுசாமி கார்டனில் உள்ள 6 மாநகராட்சி வணிக வளாக கடைகள் ஒன்பது ஆண்டுகள் முடிவடையாததால் அக்கடைகளுக்கு அரசின் ஆணைப்படி மாத வாடகை 01.01.2013 முதல் 15சதவீதம் வாடகையினை உயர்வு செய்யலாம். மேலும் கீழ்கண்ட கடை உரிமதாரர்கள் (9.5X8=76) ச.அடி வீதம் பக்கவாட்டில் கடையினை விரிவுபடுத்தி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததையும் அரசின் ஆணைப்படி பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி 01.01.2013 முதல் வாடகையினை உயர்வு செய்யலாம்.

கடைஎண். உரிமதாரர் பெயர்

1. திரு.எஸ்.சுரேஸ்
2. திரு.எஸ்.ரமேஸ்
3. திரு.உமர்
4. திரு.உமர்
5. திரு.உமர்

மேலும் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்து மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும் இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைக்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 221 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 14**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.72 - நேரு ஸ்டேடியம் கோ-ஆப்டெக்ஸ் எதிரில் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - மீன் வளர்ச்சி கழகம் - ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15சதவீதம் ,வாடகை உயர்வுடன் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்தல் -தொடர்பாக

பார்வை : 1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.

2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.

3) வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129நாள்.22.10.2012.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின்படி பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72 நேரு ஸ்டேடியம் கோ-ஆப்டெக்ஸ் எதிரில் மாநகராட்சி வணிக வளாக கடைகள் மீன் வளர்ச்சி கழகம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைக்கு 15சதவீதம் ,வாடகை உயர்வுடன் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து 01.04.2013 முதல் வாடகையினை உயர்வு செய்யலாம். உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், மான்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 222 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் மீன்வளர்ச்சிக் கழகத்தினரே கடைகளை நடத்துகிறார்களா, அனுமதிக்கப்பட்ட மீன் வகைகள் மட்டுமே விற்கப்படுகின்றனவா, கடையில் தேவையான சுகாதாரம் பேணப்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - 70 கணினி விபர பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்வொர்க் இன்ஜினியர், ஒரு உதவி நெட்வொர்க் இன்ஜினியர் - பணி நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பிரதான அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களிலும் கணினிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு 70 கணினி விபர பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்வொர்க் இன்ஜினியர், ஒரு உதவி நெட்வொர்க் இன்ஜினியர் ஆகியோரை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணியினை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.32 நாள் 08.07.2011 ன்படி M/s. KG Information Systems Pvt Ltd., கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. இந்நிறுவனத்தின் பணிக்காலம் 31.03.2013 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

மேலும் மாமன்ற தீர்மான எண் - 136, நாள் 24.07.2013 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் உத்தரவின்படி ஐந்து மாத காலத்திற்கு (ஏப்ரல் 2013, மே 2013 ஜுன் 2013, ஜுலை 2013 மற்றும் ஆகஸ்ட் 2013) பணி நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனத்தினரின் பணிக்காலம் 31.08.2013ன் முடிவடைகிறது.

எனவே அடுத்த ஓராண்டு காலத்திற்கு புதிதாக 70 கணினி விவர பதிவாளர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர் மற்றும் நெட்வொர்க் இன்ஜினியர், ஒரு உதவி நெட்வொர்க் இன்ஜினியர் கொண்டு கணினிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு 26.06.2013-ல் மின்னனு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்தனர்.

1. KG Information Systems Private limited, Coimbatore.
2. KG Financial Software Private Limited, Coimbatore.
3. PERI Software Solutions ( P ) Ltd, Chennai.

இவற்றினை பொறியியல் பிரிவின் மூலம் இறுதி செய்து புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே பணியினை மேற்கொண்டு வரும் M/s. KG Information Systems Pvt Ltd., நிறுவனத்திற்கு மேலும் ஐந்து மாத காலத்திற்கு (செப்டம்பர் 2013, அக்டோபர் 2013, நவம்பர் 2013, டிசம்பர் 2013 மற்றும் ஜனவரி 2014 ) செலவீனத் தொகை தோராயமாக ரூ.20,00,000/- ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்தக்காலத்தை நீட்டிப்பு செய்யவும் மற்றும் மேலே குறிப்பிட்ட பணிக்குரிய தொகையை வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

பிரதான அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களிலும் கணினிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு 70 கணினி விபர பதிவாளா்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளா் மற்றும் நெட்வொா்க் இன்ஜினியா், ஒரு உதவி நெட்வொா்க் இன்ஜினியா் கொண்டு கணினிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்ததாரரை தோ்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே பணியினை மேற்கொண்டு வரும் M/s. KG Information Systems Pvt Ltd., நிறுவனத்திற்கு மேலும் மாத ஐந்து காலத்திற்கு (செப்டம்பா் 2013, அக்டோபா் 2013, நவம்பா் 2013, டிசம்பா் 2013 மற்றுமு ஜனவரி 2014 ) செலவீனத் தொகை தோராயமாக ரூ.20,00,000/- ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்தக்காலத்தை நீட்டிப்பு செய்ய மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.5259/11/WS6

**மாநகர மன்ற தீா்மானம் எண் 223 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீா்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 16**

பொருள்: கோயம்புத்தூா் மாநகராட்சி – மத்திய மண்டலம் – நகரளவு வாா்டு எண்.10, பிளாக் எண்.36, நகரளவு எண்.2211/2, தேவா் சிலை அமைக்க தடையின்மை சான்று அனுமதி கோருதல் – மாமன்றத்திற்கு பொருள் சமா்ப்பித்தல் – தொடா்பாக.

பாா்வை: தேவா் சமூக கல்வி வளா்ச்சி அறக்கட்டளை, 1853, திருச்சி ரோடு, ராமநாதபுரம், கோவை மனு நாள்.10.09.2013.

கோயம்புத்துாா் மாநகராட்சி, மத்திய மண்டலம், நகரளவு வாா்டு எண்.10, பிளாக் எண்.36, நகரளவு எண்.2211/2, இராமநாதபுரம் பகுதியில் மாகாளியம்மன் கோயில் உட்புறம் வடமேற்கு மூலையில் தேவா் சமூக கல்வி வளா்ச்சி அறக்கட்டளை, 183, திருச்சி ரோடு, கோவை அமைப்பின் செயல் தலைவா் பசும்பொன் முத்துராமலிங்க தேவா் அவா்களின் சிலையினை நிறுவுவதற்கு அனுமதி வேண்டி விண்ணப்பம் சமா்ப்பித்துள்ளாா்.

மேற்காண் இடத்தில் சிலை நிறுவ காவல் துறை தடையின்மை, அரசு அனுமதி பெறப்பட வேண்டும். மேலும், சிலை அமைப்பாளா் சிலை அமைத்து பராமரிப்பு பொறுப்பினை ஏற்க வேண்டும் என்கிற நிபந்தனையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களுக்கு உத்தேசத்தினை அனுப்பி வைக்க மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண்.13306 /2010/எம்.எச்.5

**மாநகர மன்ற தீா்மானம் எண் 224 நாள் 25.10.2013**

அனுமதிக்கப்பட்டது. மேலும் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் வடபுறம் உள்ள போக்குவரத்து தீவுத் திடலிலும், மாநகராட்சி மைய அலுவலகத்திலும், தமிழக முன்னாள் முதலமைச்சா் எம்.ஜி.ஆா். அவா்களின் சிலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

**பாா்வை:** கோட்டப் பொறியாளா்(நெ), க(ம)ப அவா்களின் கடிதம் க.எண்.4132/2013/இவஅ1, நாள்.27.09.2013.

******

பாா்வையில் காண் கடிதத்தில் ஆத்துப்பாலம் உக்கடம் சந்திப்பு முதல் ஒப்பணக்கார வீதி வரை உயா்மட்ட மேம்பாலம் கட்ட 14.11.2011 அன்று சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியா்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வா் அவா்களால் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்கண்ட உயா்மட்ட மேம்பால நோ்பாட்டினை நெடுஞ்சாலைத் துறையிலுள்ள தொழில் நுட்ப குழுவினரால் 10.07.2013 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்புதல் வழங்கப்பட்ட நோ்பாட்டில் கீழ்கண்ட அரசு துறை நில எடுப்பு செய்து மாண்புமிகு முதல்வா் அவா்களால் 14.11.2011 அன்று அறிவிக்கப்பட்ட சிறப்பு திட்டத்தை விரைவாக நிறைவேற்றிட மாநகராட்சியின் இசைவு கடிதம் அனுப்பி வைக்க கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

அ). மாநகராட்சிக்கு சொந்தமான பழைய மீன் மாா்க்கெட் மற்றும் பழக்கடை பகுதியில் உள்ள நகர அளவை எண்கள் 1905/12, 13, 14 மற்றும் 1905/9ல் மேம்பாலம் அமைக்க துாண்கள் மட்டும் கட்ட முன் நுழைவு அனுமதி அரசின் அனுமதி பெற்றும், மீதம் உள்ள இடத்தினை மாநகராட்சி உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கலாம்.

ஆ). உக்கடம் பேருந்து நிலையத்திற்குட்பட்ட நகர அளவை எண்.2122ல் நில ஆா்ஜிதம் செய்யப்பட வேண்டிய இடத்தின் பரப்பளவு 6549 ச.மீட்டா் ஆகும். மேற்படி இடத்தை நெடுஞ்சாலை துறைக்கு ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளது. இந்த இடத்தில் பேருந்து நிலைய கட்டிடங்கள் மற்றும் கடைகள் உள்ளது.

எனவே, மேம்பாலம் கட்ட தற்போதைய நிலமதிப்பு மற்றும் கட்டிடத்திற்கான மதிப்பு ஆகியவற்றை நெடுஞ்சாலைத்துறை மாநகராட்சிக்கு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அரசு அனுமதி பெற்று நில ஆர்ஜிதத்திற்கான இடத்தினை நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- (அ) மற்றும் (ஆ)அனுமதிக்கலாம். ந.க.எண்.**9598/2013**/எம்.எச்.**5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 225 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 18**

| | |
|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி – சத்தியமங்கலம் பிரதான சாலையில் சங்கனூர் சாலை சந்திப்பிலிருந்து (வேலன் தியேட்டர் முதல்) மணியகாரம்பாளையம் சாலை சந்திப்பு (சூர்யா மருத்துவமனை) வரை சாலை மிகவும் குறுகலாக உள்ளதால் சாலையின் இரு பக்கமும் 10 அடி அகலத்திற்கு நில ஆர்ஜிதம் செய்தல் – மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் சத்தியமங்கலம் பிரதான சாலையில் சங்கனூர் சாலை சந்திப்பிலிருந்து (வேலன் தியேட்டர் முதல்) மணியகாரம்பாளையம் சாலை சந்திப்பு (சூர்யா மருத்துவமனை) வரை சாலை மிகவும் குறுகலாக உள்ளதால் சாலையின் இரு பக்கமும் உள்ள வார்டு எண்.21, பிளாக் எண்.29, டி.எஸ். எண்கள். 6/1, 5/1, 3/1, 77/1, 76/1, 2/1, 1/1, 70/1, 22/1, 21/1, 23/1, 24/3, 25/1, 26/1, 29/1, 30/1, 31/1, 32/1, 71/1, 33/1, 34/1, 73/1, 35/1, 36/1, 37/1, 38/1, 39/1. வார்டு எண்.20, பிளாக் எண்.21 டி.எஸ்.எண்கள்.129 – 132, 135, 74, 95. வார்டு எண்.20, பிளாக் எண்.19, டி.எஸ்.எண்கள்.111/2, 109/2, 108/2, 100/2, 99/2, 98/2, 94/2, 93/2, 92/2. வார்டு எண்.20, பிளாக் எண்.18, டி.எஸ்.எண்கள். 95/2, 94/2, 93/2, 91/2, 85/2, 82/2, 81/2, 80/2, 73/2, 72/2, 69/2, 68/2. வார்டு எண்.20, பிளாக் எண்.20, டி.எஸ்.எண்கள். 28/2, 29/2, 30/2, 38/2, 39/2, 40/2, 41/2, 54/2, 53/2, 52/2, 48/2, 46/2, 45/2, 55/2. வார்டு எண்.22, பிளாக் எண்.31, டி.எஸ்.எண்கள். 126/4, 133/2. வார்டு எண்.22 பிளாக் எண்.32, டி,எஸ்.எண்கள். 53/2, 53/3, 56/2, 49/2, 51/2, 50, 36. வார்டு எண்.22, பிளாக் எண்.36, டி.எஸ்.எண்கள். 21/2, 19/2, 18/2, 17/2, 16/2, 9/2, 8/2, 7/2, 6/2. வார்டு எண்.21, பிளாக் எண்.05, டி.எஸ்.எண்கள். 31/1, 30/1, 29/1, 28/1, 27/1, 24/1, 23/1, 22/1, 21/1, 17/1, 13/1, 12/1, 11/1, 7/1, 6/1, 5/1, 3/1, 1/1, 2/1. வார்டு எண்.21, பிளாக் எண்.06, டி.எஸ்.எண்கள். 3/1, 2/1, 1/1, 49/1, 31/1, 32/1, 31/1, 30/1, 27/1, 25/1, 24/1, 23/1, 22/1, 20/1, 21/3, 19/1, 4/1. வார்டு எண்.21, பிளாக் எண்.29, டி.எஸ்.எண்கள். 9/1, 8/1, 7/1, 6/1, 5/1, 4/1, 3/1, 2/1, 1/1, 14/3. வார்டு எண்.21, பிளாக் எண்.28, டி.எஸ்.எண்கள். 2/1, 5/1, 6/1, 13/1, 15/1, 14/1, 17/1, 16/1, 32/1, 33/1, 35/1, 40/1, 41/1, 42/1, 43/1, 45/1, 46/1 கொண்ட இடங்களை நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியுள்ளது.

இவ்வாறு இருபுறமும் 10 அடி அகலத்திற்கு நில ஆர்ஜிதம் செய்தால் மட்டுமே மழைநீர் வடிகால், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய் அமைக்க ஏதுவாக இருக்கும். இதன்மூலம் போக்குவரத்து நெரிசலும் கணிசமாக குறைய வாய்ப்பு உள்ளது. நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய மொத்த நீளம் இருபுறமும் சேர்த்து 1800 மீட்டர், மொத்த பரப்பு 60,000 சதுரடியாகும். மேற்படி நிலத்தினை நில ஆர்ஜிதம் செய்ய தேவையான நிதியை உள்கட்டமைப்பு நிதி, அபிவிருத்தி கட்டணம் அல்லது மாநகராட்சி பொது நிதியில் இருந்து பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண். **10586 /2013**/எம்.எச்.**5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 226 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

பார்வை- வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டம் தீர்மான எண்.132 நாள்.22.10.2013.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு **2013–2016** ஆண்டுக்கான பொது ஏல மின் ஏலம் **24.09.2013** அன்று நடைபெற்றது. இதில் கீழ்க்கண்ட இனத்திற்கு அதன் எதிரே கண்டுள்ளவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ. எண் | இனம் | அரசாங்க மதிப்பு | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் கோரிய உயர்ந்தபட்ச ஏலத்தொகை | மின் ஏலம் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | போத்தனூர் ரோடு லாரிப்பேட்டை நுழைவு கட்டணம் | 910175/– | திரு. அப்துல் சுக்கூர் | 300600/– | – |

இதில் திரு.அப்துல்சுக்கூர் என்பவர் அரசாங்க மதிப்பு ரூ.**910175/–**விட குறைவாக ரூ.**300600/–** ஏலம் கோரியுள்ளார். இவ்வினத்திற்கு கடந்த எட்டுமுறை ஏலம் கோரப்பட்டது. எனினும் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. மேலும் தற்போது துறை ரீதியாக வசூல் செய்ததில் நாளொன்றுக்கு சராசரியாக ரூ.**500/–**க்கு குறைவானத் தொகை மட்டுமே வசூலிக்கப்பட்டு வருவதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

எனவே, மேற்படியாருக்கு இவ்வினம் ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில், வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.132 நாள்.22.10.2013ன்படி மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 698/2012/அ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 227 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

பொருள் :- பொது சுகாதாரம்- கோயம்புத்தூர் மாநகராட்சி- சீத்தாலட்சுமி மகப்பேறு மருத்துவமனைக்கு - சகல வசதிகளுடன் கூடிய ஸ்கேன் இயந்திரம் மற்றும் நுண்கதிர் இயந்திரம் வாங்குவது - Radiologist மற்றும் நுண்கதிர் தொழில் நுட்பனர் வாடகை அடிப்படையில் பணிக்கு அமர்த்துவது - தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 9 நகர் நல மையங்களில் தற்போது ஸ்கேன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் கர்ப்பிணி தாய்மார்களின் கருவைப் பற்றிய விவரங்கள் அறிந்து அதற்கேற்ப மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் பலதரப்பட்ட நோய்களுக்கு மாநகராட்சி மருந்தகம் மற்றும் நகர் நல மையங்களில் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு ஸ்கேன் எடுப்பதற்கான வசதிகள் மாநகராட்சியில் இல்லை. இதனால் இவர்களை ஸ்கேன் எடுப்பதற்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டிய நிலை உள்ளது. இவ்வகை ஸ்கேன் பரிசோதனை செய்ய தனியார் மருத்துவமனையில் ரூ.600/- முதல் ரூ.800/- வரை கட்டணமாக வசூல் செய்யப்படுகிறது.

எனவே, ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சீத்தாலட்சுமி நகர் நல மையத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய ஸ்கேன் இயந்திரம் ஒன்று வாங்கலாம். இதற்கான செலவினம் ரூ.50 லட்சம் ஆகும். இவ்வகை ஸ்கேன் இயக்குவதற்கு Radiologist ஒருவரை வாடகை அடிப்படையில் நியமிக்கலாம். இவருக்கு நபர் ஒருவருக்கு பரிசோதனை செய்ய ரூ.250/- வழங்கலாம். இதற்காக மாநகராட்சியின் மூலம் பயனாளிகளிடமிருந்து ரூ.100/-ஐ கட்டணமாக வசூல் செய்யலாம்.

மேலும், நுண்கதிர் (X Ray) இயந்திரம் இம்மாநகராட்சியில் இல்லாததால் புதிதாக ஒரு நுண்கதிர் (X Ray) இயந்திரம் ரூ.15 லட்சம் செலவினத்தில் வாங்கலாம். இவ்வகை இயந்திரத்தை இயக்குவதற்கு நுண்கதிர் (X-Ray) தொழில் நுட்பனர் ஒருவரை வாடகை அடிப்படையில் நியமித்து மாதம் ஒன்றிற்கு ரூ.10,000/- வழங்கலாம். மேற்படி இயந்திரத்தை சீத்தாலட்சுமி நகர் நல மையத்திலேயே அமைத்து செயல்படுத்தலாம். இதற்காக மாநகராட்சியின் மூலம் நபர் ஒருவருக்கு ரூ.100/-ஐ கட்டணமாக வசூல் செய்யலாம்.

எனவே, சீத்தாலட்சுமி நகர் நல மையத்தில் புதிதாக சகல வசதிகளுடன் கூடிய ஸ்கேன் இயந்திரம் ஒன்று வாங்கவும் மற்றும் புதிதாக நுண்கதிர் ( X-Ray) இயந்திரம் ஒன்றும் வாங்கவும், அதனை செயல்படுத்த வாடகை அடிப்படையில் Radiologist மற்றும் நுண்கதிர் (X-Ray) தொழில் நுட்பனரை நியமிக்கவும் இதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண் 8016/2013/ எம்.இ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 228 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 21**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - உக்கடம் கழிவுநீர் பண்ணை – புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெருநாய் கருத்தடை மையம் செயல்படுத்துதல் - தொடர்பாக.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி, உக்கடம் கழிவுநீர் பண்ணையின் அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெருநாய் கருத்தடை மையத்தில் மாநகராட்சியில் உள்ள தெருநாய்களுக்கு கருத்தடை செய்யும் பணியினை தங்களுக்கு வழங்கக்கோரி M/s. People for Animals, Coimbatore நிறுவனத்தார் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். இவ்வமைப்பானது இந்திய பிராணிகள் நல வாரியத்தில் 09.08.2008-ல் பதிவு செய்துள்ளார்கள். (பதிவு எண் TN 173/2008).

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தற்போது 100 வார்டுகளிலும் பொதுமக்களிடமிருந்து தெருநாய்கள் பிரச்சினைகள் தொடர்பாக அதிகமான புகார்கள் பெறப்பட்ட வண்ணம் இருந்து வருகிறது. தற்போது 100 வார்டுகளுக்கும் சேர்த்து மாநகராட்சியில் ஒரே ஒரு தெருநாய்கள் கருத்தடை மையம் மட்டும் இருக்கும் காரணத்தால் தற்போது குறைவான அளவே தெருநாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டு வருகிறது. மேலும் தற்போது உக்கடம் கழிவு நீர் பண்ணைக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெருநாய் கருத்தடை மையத்தை செயல்படுத்த M/s. People for Animals, Coimbatore நிறுவனத்தார் ஒப்புதல் தெரிவித்துள்ளதால் மேற்படி நிறுவனத்தார் அளித்த MOU (Memorandum of Understanding) படிவத்தை செயலாளர், இந்திய பிராணிகள் நல வாரியம், சென்னை என்ற அமைப்பிற்கு அனுப்பி அனுமதி பெறலாம்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி, உக்கடம் கழிவுநீர் பண்ணையின் அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெருநாய் கருத்தடை மையத்தில் மாநகராட்சியின் தெற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்களில் உள்ள வார்டுகளில் தெருநாய்களுக்கு கருத்தடை செய்யும் பணியினை நிபந்தனைகளுக்குட்பட்டு PFA-II (People for Animals, Coimbatore) நிறுவனத்தாருக்கு வழங்குவது குறித்தும், செயலாளர், இந்திய பிராணிகள் நல வாரியம், சென்னை என்ற அமைப்புக்கு அனுப்புவது குறித்தும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: **5344/2008**/எம்.இ4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 229 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 22**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மாநகராட்சி நகர்நல மையங்களில் ஒப்பந்தம் அடிப்படையில் ஆயாக்கள், காவலர்கள் நியமித்தல் பணி உத்தரவு நீட்டித்தல் - அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் அனைத்து நகர்நல மையங்களிலும் ஆயாக்கள், காவலர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் ஒப்பந்தம் அடிப்படையில் தி.ள். கே.சி.பி இஞ்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், கோவை நிறுவனத்தார் மூலம் நியமிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மாமன்ற தீர்மான எண் 195 நாள் 19.09.2013-ன்படி இப்பணிக்காலம் 31.10.2013 வரை காலநீட்டிப்பு பெறப்பட்டுள்ளது. தற்போது இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு காலதாமதம் ஆகும் என்ற காரணத்தால் இப்பணிக் காலத்தை 31.12.2013 வரை காலநீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 4866/2012/(எம்.டி3)எம்இ4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 230 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மாநகராட்சி அனைத்து மண்டலங்களிலும் ஒப்பந்தம் அடிப்படையில் ஓட்டுநர்கள் - துலக்குநர்கள் நியமித்தல் -பணி உத்தரவு நீட்டித்தல் - அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் ஓட்டுநர்கள் மற்றும் துலக்குநர்கள் ஒப்பந்தம் அடிப்படையில் தி.ள். கே.சி.பி இஞ்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், கோவை நிறுவனத்தார் மூலம் நியமிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிக்காலம் 30.09.2013 உடன் முடிவடைகிறது. தற்போது இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு காலதாமதம் ஆகும் என்ற காரணத்தால் இப்பணி உத்தரவை 31.12.2013 வரை காலநீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: **2018/2012/(**எம்.டி5)எம்இ4

## மாநகர மன்ற தீர்மானம் எண் 231 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5415/ 2013 / எம் டி5 | வார்டு எண் 38- பீளமேடு மாநகராட்சி உயர் நிலை பள்ளியில் புதியதாக கணினி மற்றும் ,அறிவியல் ஆய்வு கூடம் கட்டுதல் | 75.00 | 03.10.2013 முதல் அழைப்பு | 1) திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 1.11% குறைவு 2)திரு.கே. கோவிந்தராஜ் 3.71% அதிகம் | திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 1.11% குறைவு |
| 2 | 2811/ 2013/ எம் டி4 | வார்டு எண் 73- நேரு பூங்காவில் உடற்பயிற்சி திடல் தடுப்பு சுவர் கட்டுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 69.39 | 3.10.2013 முதல் அழைப்பு | 1)தி/ வா. என். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 0.53 %குறைவு 2) தி/ வா. எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 3.87%அதிகம் | தி/ வா. என். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 0.53 %குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண். 5415/2013/எம் டி5

## மாநகர மன்ற தீர்மானம் எண் 232 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடன் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென தி/ள் BEIL-UPL (Consortium), மும்பை கூட்டு நிறுவனத்துடன் இம்மாநகராட்சி கடந்த 19-11-2007-ல் அனுகூல ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது. இம்மாநகராட்சியின் பணியானது அன்றாடம் சேகரம் செய்யப்படும் குப்பைகளை மேற்படி தனியார் நிறுவனத்தினரால் இரண்டாம் கட்டமாக அகற்றப்பட்டு வெள்ளலூர் குப்பைக்கிடங்கு அமைந்துள்ள இடத்தில் அந்நிறுவனத்தினரால் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு கொணர்ந்து சேர்க்கப்பட்டு பல்வேறு நிலைகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் எதுவுமே செய்ய இயலாத குப்பைகளென தரம் பிரித்து மக்கும் குப்பைகளை ஏரோபிக் டைஜஷன் (Aerobic Digestion) முறையில் இயற்கை உரமாக மாற்றியமைக்கப்படுகிறது. மக்காத மற்றும் எதுவுமே செய்ய இயலாத குப்பைகளை நல நிலை நிரப்பல் அமைப்பில் கொட்டப்பட்டு சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் மூடி கழிவு செய்யப்பட்டு வருகிறது.

தற்சமயம் இம்மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் ஒரு ஊராட்சி ஆகியவைகள் இணைக்கப்பட்டுள்ளதால் இம்மாநகராட்சியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவின் அளவு நாளொன்றிற்கு சுமார் 250.00 மெட்ரிக் டன் எடையாக கூடியுள்ளது. மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தினால் தற்சமயம் இம்மாநகராட்சி மேற்கூறிய தனியார் நிறுவனத்திற்கு நாளொன்றிற்கு சுமார் 850.00 மெட்ரிக் டன் எடையுள்ள தரம் பிரிக்கப்படாத திடக்கழிவுகளை சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அவ்வாறு தரம் பிரிக்கப்படாத திடக்கழிவுகளில் இம்மாநகராட்சி பகுதிகளில் சேகரமாகும் கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சி மற்றும் மீன் இறைச்சி கழிவுகள் தரம் பிரிக்கப்படாத நிலையில் ஏனைய திடக்கழிவுகளுடன் கலப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுத்துவதுடன் சுற்றுச்சூழல் பெரிதும் மாசுபடுகிறது.

மேற்படி திட்டத்தில் இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வரும் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளின் ஓர் அங்கமான இம்மாநகராட்சி பகுதிகளின் அனைத்து வார்டுகளில் உள்ள பொது மக்களிடையே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை பற்றிய விழிப்புணர்வு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்ட மாதிரியினை போல் இம்மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளில் செயல்படுத்துவதன் மூலம் கோவை மாநகரத்தினை குப்பையில்லா மாநகரமாக மாற்றியமைக்கப்படும். மேற்படி திட்டத்தினை செயல்படுத்துவதற்கு மாமன்ற தீர்மான எண்:110 நாள்:24-07-2013ன் படி விருப்பக் கட்பறிக்கை (Expression of Interest) கோரப்பட்டது. இதன் தொடர்பாக இத்திட்டத்தினை செயல்படுத்த தோராயமாக வார்டு ஒன்றுக்கு ரூ.1.10 லட்சம் இம்மாநகராட்சி பொது நிதி மூலம் செயல்படுத்த நிர்வாக அனுமதி வேண்டியும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:6088/2013/எம்.டி.2

## மாநகர மன்ற தீர்மானம் எண் 233 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்த உத்தரவு வழங்கும் முன்னர், செயல்படுத்தும் நிறுவனத்தினர், மாமன்ற உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், செய்தியாளர்கள் போன்றோர்க்கு திட்டம் குறித்து செயல்முறை விளக்கக்கூட்டம் நடத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி கல்வி – அனைத்து மண்டலம் - மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மண்டலத்திற்கு ஒரு பள்ளி வீதம் 5 பள்ளிகளுக்கு கணினி வழிக்கல்வி (E-Corp) வகுப்புகள் அமைத்தல் - தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டலம், மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மண்டலத்திற்கு ஒரு பள்ளி வீதம் 5 பள்ளிகளுக்கு கணினி வழிக்கல்வி (E-Corp) வகுப்புகள் அமைத்தல் பணிக்கு ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 4.5.2013 மற்றும் மாமன்ற தீர்மானம் எண் 114 நாள் 24.7.2013-ன்படி இப்பணிக்கு ரூ.50,15,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கு நடப்பு நிதியாண்டு 2013-2014-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 9959 / 2013 / எம்டி 2

## மாநகர மன்ற தீர்மானம் எண் 234 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 27

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண் 24, ஆர்.எஸ்.புரம், ஆரோக்கியசாமி சாலையில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2013-14 பட்ஜெட் அறிவிப்பின்படி அறிவியல் ஆய்வகம் கட்ட மதிப்பீடு ரூ.75 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது, இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 7459 / 2013 / எம்டி 2

## மாநகர மன்ற தீர்மானம் எண் 235 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 28

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 8 பிரதான சாலைகளுக்கு சர்வதேச தரத்துடன் மாதிரி சாலைகள் அமைக்க விருப்பு கேட்பறிக்கை (EOI) கோர மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான சாலைகளுக்கு சர்வதேச தரத்துடன் மாதிரி சாலைகள் அமைக்க கள ஆய்வு செய்து வடிவமைப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து விருப்ப கேட்பு அறிக்கை (EOI) உரிய கட்டிட கலை வல்லுநர்களிடமிருந்து விருப்பு கேட்பு அறிக்கை கோரவும் அதற்கான தொகை வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டிப் பொருள் வைக்கப்படுகிறது.

சாலையின் விபரம்

| வ.எண் | வார்டு எண் | சாலை பெயர் | நீளம் (கி.மீ) |
|---|---|---|---|
| 1 | 50 | ராஜீ சாலை | 1.20 |
| 2 | 23,24 | திவான் பகதூர் சாலை | 1.70 |
| 3 | 51 | டாக்டர் ராஜேந்திர பிரசாத் சாலை | 1.20 |
| 4 | 52,53 | சின்னசாமி சாலை | 1.30 |
| 5 | 22 | அழகேசன் சாலை | 1.60 |
| 6 | 71 | காமராஜர் சாலை | 1.40 |
| 7 | 55 | பாலசுந்தரம் சாலை | 1.30 |
| 8 | 53 | வி.கே.கே.மேனன் சாலை | 1.30 |
| | | மொத்தம் | 11.00 |

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்

1. மேற்கண்ட சாலைகளில் கட்டிட கலை வல்லுநர்கள் தேர்வு செய்யும் சாலைகளை உலகத்தரம் வாய்ந்த சாலையாக அமைக்க அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் கள ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை கோர அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தேவையான நிதி ஆதாரத்தினை அரசிடமிருந்து கோரலாம்.

ந.க.எண் : 10583/2013/எம்.டி.4

## மாநகர மன்ற தீர்மானம் எண் 236 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பு 1, 2, 3-ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 29

| | |
|---|---|
| பொருள் - | கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்- வார்டு எண் 69-புலியகுளம் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய கடைகள் இரண்டற்கு 30.08.13-ம் தேதி நடைபெற்ற ஏல நடவடிக்கை-வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 69-ற்குட்பட்ட புலியகுளம் பகுதியில் கட்டப்பட்டுள்ள இரண்டு புதிய கடைகளுக்கு 15.05.13, 12.06.13, 25.07.13 மற்றும் 30.08.2013–ம் தேதிகளில் நான்கு முறை மறுஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலம் நடைபெற்றது. இவற்றில் 30.08.13 அன்று நடைபெற்ற மறு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களில் உயர்ந்தபட்ச கேள்வி விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு

1. கடை எண் 1.

| வ. எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | மின் ஏலத்தொகை | உயர்ந்த ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருமதி. ஆர். பானுமதி | 4100 | - | 4100 |
| 2 | திருமதி. வி. கலாவதி | 3500 | - | - |

2.கடை எண் 2.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | மின் ஏலத்தொகை | உயர்ந்த ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருமதி. ஆர்.பானுமதி | 4100 | - | 4100 |
| 2 | திருமதி. ஆர். ஆனந்தி | 3500 | - | - |

மேற்காணும் இரண்டு கடைகளுக்கும் மாநகராட்சி மதிப்பாக ரூ.4000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது நடைபெற்ற மறு ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள உச்சக்கேள்வித் தொகையானது மாநகராட்சி தொகையைவிட கூடுதலாகும். எனவே 1 மற்றும் 2-ற்கு திருமதி. பானுமதி என்பவர் கோரியுள்ள உச்சக்கேள்வித் தொகை ரூ.4100/-ஐ ஏற்று வரிவிதிப்பு மற்றும் மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 107, நாள் 22.10.2013-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரையின்படி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் 4306 /2013/கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 237 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 107 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 30

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி -கிழக்கு மண்டலம்-வார்டு எண் 57-மசக்காளிபாளையம் ரோடு - மாநகராட்சி புதிய வணிக வளாகம் - வாடகை மற்றும் வைப்புத்தொகை நிர்ணயம் செய்ததை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

--------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 57-ற்குட்பட்ட மசக்காளிபாளையம் ரோட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வணிகவளாகத்தில் உள்ள கடைகள் தற்போது ஏலம் விடத் தயார்நிலையில் உள்ளது. மேற்படி கடைகளுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி சதுரடிக்கு ரூ59.70 பைசாவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.மேற்படி கடைகளுக்கு மாதாந்திர வாடகை மற்றும் ஏலம்விட ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை கீழ்க்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளதை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 98 நாள். 22.10.2013–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மாதாந்திர வாடகை விவரம்:

| வ. எண் | கடை எண் | அளவு ச.அ | நிர்ணயம் செய்யப்பட வேண்டியமாத வாடகை |
|---|---|---|---|
| 1 | 1 முதல் 7 | 184.84 | 11,100 |
| 2 | 8 | 179.40 | 10,800 |
| 3 | 9 | 147.87 | 8,900 |
| 4 | 10 | 171.24 | 10,300 |
| 5 | 11 | 163.09 | 9,800 |

I. ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை விவரம்:

| வைப்புத் தொகை ரூபாயில் | காப்புத் தொகை ரூபாயில் | வங்கி உறுதிச்சான்று | வங்கி உறுதிச்சான்றுக்குபதிலாக செலுத்த வேண்டிய தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1,00,000/- | 75,000/- | 1,50,000/- | 75,000/- |

மேற்படி வரிவிதிப்பு நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் : 10319 /2013/கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 238 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 98 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 31

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்திமிடம் குத்தகைக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - வரிவிதிப்பு மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரைக்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பித்தல்- தொடர்பாக |
| பார்வை | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 106 நாள் 22.10.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 64- சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிட குத்தகைக்கு 27.12.12, 23.01.13, 12.06.13,25.07.13 மற்றும் 30.08.13 ஆகிய தேதிகளில் ஐந்து முறை மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவற்றில் 30.08.13 5-வது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ள கீழ்க்கண்டுள்ள நபர்கள் கலந்து கொண்டு ஏலக்கெள்வி பதிவு செய்துள்ளார்கள்.

| வ. எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | மின்ஏலத் தொகை | உச்சக்கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. என். செந்தில்குமார் | 14,50,099 | - | - |
| 2 | திரு. ஜி. ரங்கராஜ் | 16,00,000 | - | - |
| 3 | திரு. வி. ஞானவேல் | 25,55,000 | - | 25,55,000 |
| 4 | திரு. எஸ். தர்மராஜ் | 14,58,000 | 18,76,500 | - |
| 5 | திரு. கே.முனியாண்டி | 14,71,000 | - | - |
| 6 | திரு. கே. ராஜு | 15,50,000 | - | - |

மேற்படி இனத்திற்கு மாநகராட்சி மதிப்பாக ரூ.15,95,000/- நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இந்நிலையில் தற்போது நடைபெற்ற ஐந்தாவது மறு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களில் திரு.வி.ஞானவேல் என்பவர் பதிவு செய்துள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.25,55,000/-ம் என்பது மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள மதிப்பைவிட கூடுதலாகும். மேலும் கடந்த 4 முறை நடைபெற்ற ஏலத்தில் உச்சக்கேள்வி கோர யாரும் முன்வராத காரணத்தால் இவ்வினத்தை ஏற்கனவே குத்தகைக்கு நடத்தி வந்த குத்தகைதாரர் திரு. ஜி. ரங்கராஜ் என்பவருக்கு 01.09.2013 முதல் 30.11.2013 வரை ஆணையாளர் அவர்களின் 10.08.2013-ம் தேதிய உத்தரவின்படி மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு வழங்கி உரிமத் தொகை ரூ.3,79,749/- ம் வசூலிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி இனத்தின் உச்சக் கேள்வி மாமன்றத்தின் ஒப்புதல் பெறும் வரை தற்போது குத்தகை நடத்தி வரும் திரு.ஜி.ரங்கராஜ் என்பவருக்கு தொடர்ந்து அனுமதி வழங்கவும், உச்ச கேள்விதாரர் திரு.வி. ஞானவேல் எனபவருக்கு மேற்படி இனம் ஒப்படைக்கும் பொழுது திரு.ஜி.ரங்கராஜ் என்பவரிடம் வசூலிக்கப்பட்ட உரிமத் தொகையில் உரிமம் நடத்தப்பட்ட நாட்களுக்கான தொகை பிடித்தம் செய்து கொண்டு மீதமுள்ள தொகையை திரும்ப வழங்குவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 106, நாள் 22.10.2013-ல் இவ்வினத்திற்கு உச்சக்கேள்வி கோரிய திரு. வி. ஞானவேல், த/பெ. விஜயன் என்பவருக்கு 2013-14-ம் ஆண்டிற்கான உரிமத் தொகை செலுத்த 26.09.2013 மற்றும் 11.10.2013-ம் தேதிகளில் உத்திரவு அனுப்பப்பட்டு நாளது தேதி (22.10.2013) வரை திரு வி. ஞானவேல், த/பெ. விஜயன் அவர்களால் குத்தகை தொகை செலுத்தப்படவில்லை. எனவே ஒப்பந்ததாரரை கருப்புப் பட்டியலில் சேர்க்கவும், செலுத்தப்பட்ட வைப்புத்தொகை, காப்புத் தொகை, வங்கி உத்திரவாதச் சான்றுக்கு பதிலாக செலுத்தப்பட்ட தொகைகளை பறிமுதல் செய்தும், இவ்வினத்திற்கு கீழ்க்கண்டுள்ளவாறு வைப்புத் தொகை காப்புத்தொகை, வங்கி உத்திரவாதத் தொகை, வங்கி உத்திரவாத சான்றிதழுக்குப் பதிலாக செலுத்தவேண்டிய தொகைகளை உயர்வு செய்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வைப்புத்தொகை ரூபாயில் | காப்புத்தொகை ரூபாயில் | வங்கி உத்திரவாத சான்று ரூபாயில் | வங்கி உத்திரவாதச் சான்றிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 2,00,000/- | 1,00,000/- | 10,00,000/- | 2,00,000/- |

மேலும் மேற்படி இனத்திற்கு மறு ஏலம் கோரவும் பரிந்துரை செய்துள்ளது. மேற்படி பரிந்துரை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். 2921/2013/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 239 நாள் 25.10.2013**

ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கையை கைவிடவும், அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கியும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - வார்டு எண் - 57க்குட்பட்ட சின்னசாமி லே அவுட் பகுதியில் உள்ள வணிக வளாகக் கடைகளுக்கு 30.08.2013-ம் தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக

--------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 57 சின்னசாமி லே அவுட் பகுதியில் கட்டப்பட்டுள்ள கடைகள் 1,2,3 மற்றும் 4-ஆகியவற்றிற்கு கடந்த 30.08.2013 அன்று மறு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவற்றில் கலந்து கொண்டு உயர்ந்த பட்ச கேள்வித்தொகை கீழ்க்கண்டுள்ள விவரப்படி பதிவு செய்துள்ளனர்.

I. <u>கடை எண் 1.</u>

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | மின் ஏலத்தொகை | உயர்ந்த ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. எஸ்.சண்முகநாதன் | 8200 | | 8200 |
| 2 | திருமதி. வி. கலாவதி | - | - | - |

II. <u>கடை எண் 3.</u>

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | மின் ஏலத்தொகை | உயர்ந்த ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருமதி. எஸ்.கோமதி | 8300 | - | - |
| 2 | திரு. பா. கார்த்திகேயன் | 8500 | - | 8500 |

III. கடை எண் 4.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | மின் ஏலத்தொகை | உயர்ந்த ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருமதி. என். வான்மதி | - | 8170 | 8170 |
| 2 | திரு. வி. கலாவதி | 4100 | - | - |
| 3 | திரு. பி. சங்கரசுப்பு | 3500 | - | - |

மேற்காணும் கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலத்தில் கலந்து கொண்டு கடை எண். 1-ற்கு திரு. எஸ்.சண்முகநாதன் என்பவரின் உச்சக்கேள்வி தொகை ரூ.8200/-ம், கடை எண். 3-ற்கு திரு.பா.கார்த்திகேயன் என்பவரின் உச்சக்கேள்வி தொகை ரூ.8500/-ம் கடை எண்.4-ற்கு திருமதி.வான்மதி என்பவரின் உச்சக்கேள்வி தொகை ரூ.8170/-ம் மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள மதிப்பைவிட கூடுதலாகும். எனவே மேற்படி உச்சக் கேள்வித்தொகையை ஏற்று வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 105, நாள் 22.10.2013-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரையின்படி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் 4964 /2013/கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 240 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 105 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 33**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்- வார்டுஎண் 64-ல் சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டமான அம்மா உணவகம் செயல்படுவதற்காக உணவகத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்து குத்தகை இனத்திலிருந்து மேற்படி இனத்தை நீக்கம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையை மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 108, நாள் 22.10.2013.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 64-ல் சிங்காநல்லூரில் அமைந்துள்ள மாநகராட்சி பேருந்து நிலையத்தில் உணவகம் நடத்துவதற்கு 2013- 2014-ம் ஆண்டிற்கு திரு.இரத்தினக்குமார் என்பவருக்கு உரிமம் வழங்கப்பட்டு உரிமத்தொகை வசூலிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டமான அம்மா உணவகம் செயல்படுவதற்காக உணவகத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்து தொகை மீண்டும் உரிமதாரருக்கு வழங்க ஆணையாளர் அவர்களின் 10.04.2013-ம் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி உணவகத்தில் அம்மா உணவகம் செயல்பட்டு வருவதால், குத்தகை இனத்திலிருந்து மேற்படி இனத்தை நீக்கம் செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 108, நாள் 22.10.2013-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரையை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 864 /2013/கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 241 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 108 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 34**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண். 24 ரங்கே கவுடர் வீதியிலுள்ள நவீன மலர் அங்காடி வணிக வளாகத்தில் முன்புறம் காலியாக உள்ள தென் மேற்கு பகுதியில் உள்ள இடத்தினை – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பண்ணை பசுமை காய்கறித் திட்டம் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் ஆரம்பிக்க இலவசமாக இடம் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக.

பார்வை :

1. கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர், கூட்டுறவு துறை, கோவை மண்டலம் அவர்களின் கடித ந.க.எண் .4373/2013 / நு1 / நாள். 13.09.2013.
2. ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள். 19.09.2013

******

பார்வை 1–ல் காணும் கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பூமார்க்கெட் பகுதியில் உள்ள இடத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பண்ணை பசுமை காய்கறித் திட்டத்தினை பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் (Farm Fresh Consumer Outlets) மூலம் விரைவில் ஆரம்பிக்க 10 x 20 சதுரடி அளவுள்ள கட்டிடமோ அல்லது காலி மனையோ இலவசமாக ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளனர்.

மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண், 24 ரங்கே கவுடர் வீதியிலுள்ள நவீன மலர் அங்காடி வணிக வளாகத்தில் முன்புறம் காலியாக உள்ள தென்மேற்கு பகுதியில் 200 சதுரடி (10 x 20) அளவுள்ள இடம் காலியாக உள்ளது. அவ்விடத்தின் தற்கால மார்கெட் மதிப்பு (பதிவு துறை) சதுரடி ரூ.5000/– ஆகும். அவ்விடத்தில் பண்ணை பசுமை காய்கறித் திட்டத்தினை பண்ணை பசுமை நுகர்வோர் கடைக்கு வாடகை நிர்ணயம் செய்வது குறித்தும் (Farm Fresh Consumer Outlets) மேற்படி இடத்தில் கூட்டுறவு சங்கமே தங்கள் செலவில் கடை அமைத்துக் கொள்ள அனுமதி வேண்டியும் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் தீர்மான எண். 128 நாள்.22.10.2013–ன் படி மாதந்திர வாடகை தொகை ரூ.2500/– என நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.9109/13/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 242 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 128 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 35

பொருள் - கோயம்புத்தூர் மநாகராட்சி மேற்கு மண்டலம் - வார்டு எண்.5-கவுண்டம்பாளையம் பிரிவு ஓணாப்பாளையம் சாலை அசோக்நகர் கிழக்கு பகுதியில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு – பொது / மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கு – டெபாசிட் தொகை மற்றும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் மூலம் வாடகை தொகையை அரசு மதிப்பீட்டின்படி நிர்ணயம் செய்தல் - தொடர்பாக.

----

கோயம்புத்தூர் மாநகராட்சியில், மேற்கு மண்டலம், வார்டு எண்.5-கவுண்டம்பாளையம் பிரிவு ஓணாப்பாளையம் சாலை அசோக்நகர் கிழக்கு பகுதியில் மாநகராட்சி மூலம் கட்டப்பட்டு வருகின்ற கடை எண். 6 to 10 (5 வணிகவளாக கடைகள்) வணிக வளாக கடைகளுக்கு பொது /மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கு அதற்குண்டான டெபாசிட் தொகைகள் மற்றும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யவும்,

| வ.எண். | வைப்புத்தொகை (ரூ) | காப்புத்தொகை (ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் (ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் மதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | 1,00,000/- | 50,000/- | 2,00,000/- | 1,00,000/- |

| வ. எண். | வார்டு எண். | வணிக வளாக கடைகள் | கடைகளின் எண்ணிக்கை | சதுரடி (கடை ஒன்றுக்கு) | பொதுப்பணித் துறை மதிப்பீடு (சதுரடி ஒன்றுக்கு) | அரசு நிர்ணயத் தொகை (Base Value) (கடை ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 5 | வார்டு எண்.5-கவுண்டம்பாளையம் பிரிவு ஓணாப்பாளையம் சாலை அசோக்நகர் கிழக்கு பகுதி கடை எண்கள். 6 to 10 | 5 | 16 x 10 = 160 | 43.02 | ரூ.6900 |

மேற்படி கடைகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள வாடகை மற்றும் வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகைகளை நிர்ணயம் செய்யவும், பொது /மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.97 நாள்.22.10.2013-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 8151/ 2013 / A1(w)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 243 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 97 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 36**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 30.8.2013-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடர்பாக.

பார்வை: பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.30.8.2013.

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2013-2016 மற்றும் வணிகவளாக கடைகள் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 30.9.2013-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

ஏலம் நடைபெற்ற தேதி – 30.9.2013

| வ. எண் | குத்தகை இனங்கள் & வணிக வளாகங்கள் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | 2013-14-ம் ஆண்டு நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத் தொகைகளி ன் விபரம் | | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தேதி | தொகை | | | | |
| 1. | தடாகம்ரோடு நவீன கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 531300 | 26.12.12<br>23.01.13<br>13.02.13<br>28.02.13<br>13.03.13<br>27.3.13<br>17.4.13<br>15.5.13 | Nil<br>Nil<br>Nil<br>Nil<br>Nil<br>Nil<br>ஒருவர் மட்டுமே<br>Nil | S.தர்மராஜ்<br>M.A.சிராஜ்தீன் | -<br>- | 378000<br>252000 | 378000 |

குத்தகை இனங்கள்

மேற்படி இனத்திற்கு 2013-14-ம் ஆண்டு இதுவரை 9 முறை ஏலம் விடப்பட்டுள்ளது. இதுவரை எவரும் கலந்து கொள்ளவில்லை. இம்முறை இரண்டு பேர் ஏலம் கோரியத்தில் திரு.S.தர்மராஜ் உயர்ந்தபட்சமாக ரூ.3,78,000/-ற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இது அரசு நிர்ணயத்தொகை ரூ.5,31,300/- (Base value) விட குறைவாக உள்ளது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.110 நாள்.22.10.2013-ன்படி மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.12794 / 2012 / A1(w)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 244 நாள் 25.10.2013**

உயர்ந்தபட்ச ஏலம் கோரியுள்ள திரு எஸ். தர்மராஜ் என்பவருக்கு உரிமம் ஒப்படை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 37

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.9.2013-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடர்பாக.

பார்வை: பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.24.9.2013.

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2013-2016 மற்றும் வணிகவளாக கடைகள் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 24.9.2013-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

ஏலம் நடைபெற்ற தேதி – 24.09.2013

| வ. எண் | குத்தகை இனங்கள் & வணிக வளாகங்கள் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| | குத்தகை இனங்கள் | | | | | |
| 1. | மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள நவீன பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டண வசூல் மற்றும் குளீருட்டப்பட்ட ஆண்கள், பெண்கள் ஓய்வு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 6,18,850 (குத்தகை இனத்தினை பிரிக்கப்பட்ட பின்பு நடத்தும் 3-வது ஏலம்) | பாலசுப்ரமணி<br>M.செல்வம் | -<br>- | 2,92,500<br>2,52,000 | 2,92,500 |
| 2. | மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள நவீன பேருந்து நிலையத்தில் தரைதளத்திலுள்ள இரண்டு கட்டண கழிப்பிடம் ஆண்கள், பெண்கள் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 10,00,000 (குத்தகை இனத்தினை பிரிக்கப்பட்ட பின்பு நடத்தும் 3-வது ஏலம்) | பாலசுப்ரமணி<br>M.செல்வம் | -<br>- | 4,59,900<br>4,05,000 | 4,59,900 |

குத்தகை இனங்கள்

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு நடைபெற்ற 11-வது (26.12.2012, 23.1.2013, 13.2.2013, 28.2.2013, 13.3.2013, 27.03.2013, 17.4.2013, 15.05.2013, 12.06.2013, 25.07.2013, 30.08.2013) ஏலத்தில் அரசு நிர்ணயத்தொகையை ரூ.6,18,850/- (Base value) விட குறைவாக ரூ.2,92,500/-ற்கு திரு.பாலசுப்ரமணி ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். 10.9.2012 முதல் துறைவாரியான வசூல் மேற்கொண்டதில் மேற்படி இனத்தில் பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டண வசூல் மட்டும் மாதம் ஒன்றிற்கு ரூ.14,500 x 12 = ரூ.1,74,000/- வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி இனத்தில் உள்ள குளீருட்டப்பட்ட ஆண்கள், பெண்கள் ஓய்வு அறையை பொதுமக்கள் இதுவரை யாரும் பயன்படுத்தப்படவில்லை. எனவே அதற்கான கட்டணம் ஏதும் துறைவாரியாக வசூல் செய்யப்படவில்லை. துறைவாரியான வசூல் தொகையை விட ஏலத்தொகை அதிகமாக உள்ளது.

வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு நடைபெற்ற 11-வது (26.12.2012, 23.1.2013,13.2.2013, 28.2.2013, 13.3.2013, 27.03.2013, 17.4.2013, 15.05.2013, 12.06.2013, 25.07.2013, 30.08.2013) ஏலத்தில் அரசு நிர்ணயத்தொகையை ரூ.10,00,000/- (Base value) விட குறைவாக ரூ.4,59,900/-ற்கு திரு. பாலசுப்ரமணி ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். 10.9.2012 முதல் துறைவாரியான வசூல் மேற்கொண்டதில் மேற்படி இனத்திற்கு மாதம் ஒன்றிற்கு சராசரியாக ரூ.40,000 x 12 = ரூ.4,80,000/- வசூல் செய்யப்பட்டு வருகிறது. துறைவாரியான வசூல் தொகையை விட ஏலத்தொகை குறைவாக உள்ளது.

எனவே, ஆணையாளர் அவர்களின் குறிப்பின்படி குத்தகை இனங்கள் வரிசை எண்.1 முதல் 2 வரை உள்ள இனங்களுக்கு 11 முறை ஏலம் நடத்தப்பட்டுள்ளதால் மேற்படி குத்தகை இனங்களை ஒப்படைப்பது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுதீர்மான எண்.112 நாள். 22.10.2013-ன்படி குத்தகை இனங்கள் வண்.1 மற்றும் 2 அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.12794/2012/அ1(மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 245 நாள் 25.10.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 112 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 38

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.71, வார்டு எண்.72 மற்றும் வார்டு எண்.50-ல் மாநகராட்சி வணிக வளாக கடைகளில் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று – ஒப்படைத்தல் - தொடர்பாக

பார்வை- 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.30.09.2013
2.வ.வி.ம.நி.குழு தீர்மான எண். 100 நாள.22.10.2013

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 24.09.2013-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

(அ)

| வ.எண். | இனம் | 24.09.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| 1 | வார்டு எண் 71 புலியகுளம் ரோட்டில் மயான புறம்போக்கு இடம் கடை எண் 1( 102சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.5,161/- | ரூ.4,000/- திரு.K.ராஜேந்திரன் (ஒப்பந்தப்புள்ளி ) |

மேற்படி இனத்திற்கு ஐந்துமுறை நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. தற்போது ஆறாவது முறையாக 24.09.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.5161/-ஐ காட்டிலும் குறைவாக ரூ.4,000/-க்கு திரு.K.ராஜேந்திரன் அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இவ்வினத்தை ஒப்படை செய்யலாம்.

(ஆ)

| வ.எண். | இனம் | 30.08.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 24.09.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.50-ல் ராஜு ரோடு கிழக்கு பகுதியில் தரை தளத்தில் (161.46சதுரடி) கடை எண்.6 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.6,200/- | ரூ.6,200/- திருமதி. N.செல்வி (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.9,250/- திரு.S.தர்மராஜ் (மின்ஏலம் ) |
| 2 | வார்டு எண்.50-ல் ராஜு ரோடு கிழக்கு பகுதியில் தரை தளத்தில் (161.46சதுரடி) கடை எண்.7 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.6,000/- | ரூ.6,000/- திரு.K.ராஜேந்திரன் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.9,450/- திரு.S.தர்மராஜ் (மின்ஏலம் |

மேற்படி (ஆ) இனத்திற்கு இரண்டாம் முறை 24.09.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.6 மற்றும் 7 ஆகிய கடைகளுக்கு(இரண்டு கடைகள்) அரசு நிர்ணய மதிப்பீடு தொகையை காட்டிலும் கூடுதலாக மின்ஏலம் பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தை ஒப்படை செய்யலாம்.

(இ)

| வ.எண். | இனம் | 30.08.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 24.09.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயா |
|---|---|---|---|
| 3 | வார்டு எண்.50-ல் ராஜு ரோடு கிழக்கு பகுதியில் தரை தளத்தில் (161.46சதுரடி) கடை எண்.5 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.4,610/- | - | ரூ.9,150/- திரு.S.தர்மராஜ் (மின்ஏலம் ) |

மேற்படி (இ) இனத்திற்கு இரண்டாம் முறை 24.09.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.5-க்கு அரசு நிர்ணய மதிப்பீடு தொகையை காட்டிலும் கூடுதலாக மின்ஏலம் பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தை ஒப்படை செய்யலாம்.

(ஈ)

| வ.எண். | இனம் | 30.08.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 24.09.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.50-ல் ராஜு ரோடு மேற்கு பகுதியில் தரை தளத்தில் (161.46சதுரடி) கடை எண்.1 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.7,705/- | ரூ.7,705/- தி/ள்.லேண்ட்ஸ் & லேண்ட்ஸ் வென்ச்சர்ஸ் இந்தியா (பி) லிமிடெட் (மின்ஏலம்) | ரூ.10,250/- தி/ள்.லேண்ட்ஸ் & லேண்ட்ஸ் வென்ச்சர்ஸ் இந்தியா (பி) லிமிடெட (மின்ஏலம்) |

மேற்படி (ஈ) இனத்திற்கு இரண்டாம் முறை 24.09.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் தரைதளம் கடை எண்.1-க்கு அரசு நிர்ணய மதிப்பீடு தொகை ரூ.7,705/- காட்டிலும் கூடுதலாகரூ.10,250/- தி/ள்.லேண்ட்ஸ் & லேண்ட்ஸ் வென்ச்சர்ஸ் இந்தியா (பி) லிமிடெட் அவர்களிடமிருந்து மின்ஏலம் பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தை ஒப்படை செய்யலாம்.

மேற்படி கடையை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.100 நாள்.22.10.2013-ன் படி, அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.4363/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 246 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 100 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 39

| | |
|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி – குத்தகை இனங்கள் -வருவாய் பிரிவு - அரசு ஆணையின்படி மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடுதல் - முதலாண்டு, இரண்டாண்டு முடிவுற்றது 5% உயர்வு செய்து அடுத்த ஆண்டிற்கு நீட்டிப்பு செய்தல் - நீட்டிப்பு செய்ய இயலாமல் ஒப்பந்ததாரர்கள் திரும்ப ஒப்படை செய்யப்படுதல் - புதிதாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியலில் சேர்த்தல் - தொடர்பாக. |
| பார்வை: | 1. அரசு ஆணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2)துறை நாள். 25.05.2009<br>2. அரசு ஆணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை நாள். 03.07.2007<br>3. மாமன்ற தீர்மானம் எண். 287 நாள். 29.11.2012<br>4. வ.வி.ம.நி.குழு தீர்மானம் எண். 99 நாள். 22.10.2013 |

பார்வை 1 மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள அரசாணைப்படி, மாநகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனங்கள் மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்படை செய்யப்பட்டு வருகிறது.

சில குத்தகைதாரர்கள் முதலாண்டு மற்றும் இரண்டாண்டு முடிவில் 5% தொகை உயர்வு செய்து அடுத்த ஆண்டிற்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்வதற்குப் பதிலாக நடத்த இயலவில்லை எனத்தெரிவித்து மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படை செய்கின்றனர். மாநகர மன்ற தீர்மானம் 287 நாள் 29.11.2012ன்படி, அவ்வாறு ஒப்படை செய்யும் இனங்களின் வைப்பு தொகையினை பறிமுதல் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுகளில் அதே குத்தகைதாராகள் அதே இனத்திற்கு ஏலத்தில் கலந்து கொள்ள வருகின்றனர். அவ்வாறு கலந்து கொண்டு குறைந்த ஏலத்தொகைக்கு ஏலம் கோருகின்றனர். எனவே, அரசாணையின்படி மூன்றாண்டுகளுக்கு உரிமம் பெற்ற நபர் உரிமத்தை தொடர்ந்து நீட்டிப்பு செய்யாமல் ஒப்படை செய்யும் நோவில் அவரது வைப்பு தொகையினை பறிமுதல் செய்வதுடன் அவரது பெயரை கருப்புப்பட்டியலில் சேர்த்து தொடர்ந்து பொது ஏலத்தில் கலந்து கொள்வதிலிருந்து தடை செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 99 நாள். 22.10.2013ன்படி, அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்த தைத் தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 4642/2010/எம்.ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 247 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 99 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 40

| | |
|---|---|
| பொருள் : | வடக்கு மண்டலம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வார்டு எண் 1க்கு உட்பட்ட துடியலூர் மேட்டுபாளையம் சாலையில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது – தொடர்பாக |
| பார்வை : | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 98 நாள் 22.10.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 1ல் துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் மாநகராட்சி மூலம் ரூ.49.80 இலட்சம் மதிப்பீட்டில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு புதிய வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இதில் தரை தளத்தில் 12(பன்னிரன்டு) கடைகள் உள்ளன. இக்கடைகளுக்கு சதுரடி 1க்கு ரூ.28.10/- என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் எனவும் உதவி நிர்வாக பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>தரைதளம்</u>

| கடை எண் | அளவு | சதுரடி | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 முதல் 12 வரை | 10 X 16 | 160 | ரூ.5600/- |

<u>வைப்பு தொகைகள்</u>

| வைப்பு தொகை | காப்பு தொகை | சால்வென்சி தொகை | சால்வென்சிக்கு பதிலாக செலுத்தப்படும் தொகை |
|---|---|---|---|
| ரூ.100000 | ரூ.50000 | ரூ.200000 | ரூ.50000 |

எனவே மாநகராட்சியால் மேற்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை தொகையின் அடிப்படையில் கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஏல வைப்பு தொகைகள் நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 98 நாள் 22.10.2013ல் இப்பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2013/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 248 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 98 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 41

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 01 துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு இரண்டாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரி ஏலதாரர்களுக்கு கடைகளை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருவது- தொடர்பாக

பார்வை - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 113 நாள் 22.10.2013

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 01ல் துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள பன்னிரெண்டு கடைகளுக்கு இரண்டாவது முறையாக மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.09.2013ம் தேதியில் நடைபெற்றது. இதில் கீழ்குறிப்பிட்டுள்ள கடை எண் 1, 3, 6, 7 மற்றும் 12 ஆகிய கடைகளுக்கான ஏலதாரர்கள் அரசு மதிப்பு ரூ.6000/-னை காட்டிலும் உயர்ந்தபட்சமாக மாதம் ஒன்றிற்கு ரூ.9000/-ற்கு மேல் ஏலம் கோரியுள்ளனர்.

கடை எண் 1 (அரசு மதிப்பு ரூ.6000/-    கடையின் அளவு  10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 30.08.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 24.09.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.ஏ.கலிபுல்லா | ரூ.8001/- | ரூ.10600/- |
| 2 | திரு.என்.செந்தில்குமார் | ரூ.8150/- | ரூ.10160/- |
| 3 | திரு.ஏ.சரவணக்குமார் | - | ரூ.8700/- |
| 4 | திரு.ஆர்.இளங்கோ | ரூ.7800/- | ரூ.8100/- |

மேற்படி ஏலதாரர்களில் திரு.எம்.ஏகலிபுல்லா என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும்  கூடுதலாக ரூ.10600/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 3 (அரசு மதிப்பு ரூ.6000/-    கடையின் அளவு  10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 30.08.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 24.09.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திருமதி.கே.எஸ்.ராதா | - | ரூ.11300/- |
| 2 | திரு.ஜாபர் சாதிக் | - | ரூ.9250/- |
| 3 | திரு.எஸ்.சிவக்குமார் | - | ரூ.9300/- |
| 4 | திரு.குணசேகரன் | - | ரூ.8118/- |

மேற்படி திருமதி.கே.எஸ்.ராதா என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும்  கூடுதலாக ரூ.11300/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 6 (அரசு மதிப்பு ரூ.6000/-    கடையின் அளவு  10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 30.08.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 24.09.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.சுரேஷ்குமார் | - | ரூ.9600/- |
| 2 | திரு.ஆர்.ஜெகதீஸ்பாபு | ரூ.7100/- | ரூ.9125/- |
| 3 | திரு.கே.செந்தில்குமார் | ரூ.7900/- | ரூ.9000/- |

மேற்படி திரு.எம்.சுரேஷ்குமார் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும்  கூடுதலாக ரூ.9600/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 7 (அரசு மதிப்பு ரூ.6000/-    கடையின் அளவு  10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 30.08.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 24.09.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.மணிமேகலை | ரூ.9100/- | ரூ.9100/- |

மேற்படி திருமதி.எஸ்.மணிமேகலை என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும்  கூடுதலாக ரூ.9100/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 12 (அரசு மதிப்பு ரூ.6000/-    கடையின் அளவு  10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 30.08.2013 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 24.09.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.உதயகுமார் | ரூ.12005/- | ரூ.13220/- |

மேற்படி திரு.ஆர்.உதயகுமார் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும்  கூடுதலாக ரூ.13220/-க்கு உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரியுள்ள ஏலதாரர்களுக்கு கடைகளை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 113 நாள் 22.10.2013ல் கடை எண் 7 க்கு மறுஏலம் கோரவும், மீதமுள்ள கடை எண் 1, 3, 6 மற்றும் 12 ஆகிய கடைகளில் ஏலக்கோரிக்கைகளை ஏற்று கடைகளை ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6303/2013/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 249 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 113 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 42

பார்வை : 1. துடியலூர் பேரூராட்சி தீர்மான எண் 77 நாள் 10.12.2009 மற்றும் தீர்மான எண் 8 நாள் 30.05.2011
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 73 நாள் 17.02.2012
3. திரு.தர்மலிங்கம் அவர்களது ஒப்புதல் கடிதம் நாள் 12.09.2012
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானமன் எண் 131 நாள் 22.10.2013

*******

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் தினசரி மார்க்கெட்டிற்கு வடபுறம் உள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் செயல்பட்டு வரும் உணவு விடுதி மற்றும் அதன் அருகில் உள்ள காலியிடம் ஆகியவற்றை பார்வையில் காணும் பேரூராட்சி தீர்மான எண் நாள் 10.12.1999 மூலம் திரு.தர்மலிங்கம் என்பவருக்கு 01.07.2010 முதல் 31.03.2010 வரையிலும் மாத வாடகை வணிக வளாக கட்டிடத்திற்கு ரூ 33000/- க்கும் காலியிடத்திற்கு ரூ.4000/- க்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி உணவு விடுதி மற்றும் காலியிடத்தக்கு 01.04.2010 முதல் 31.03.2011 வரை பேரூராட்சி தீர்மான எண் 8 நாள் 30.05.2011 மூலம் முந்தைய வாடகை தொகையிலிருந்து 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பிக்கப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ34650 மற்றும் ரூ 4200 என்ற அடிப்படையில் வாடகை வசூலிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கட்டிடத்திற்கு 01.04.2012 முதல் 31.03.2015 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுப்பிக்க வரிவிதிப்பின் மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 73 நாள் 17.02.2012ல் உணவு விடுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலியிடம் மற்றும் கட்டிடத்தின் அளவுகள் முதலியவற்றை மறு ஆய்வு செய்து மீண்டும் பொருள் வைக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தீர்மானத்தின்படி உணவு விடுதி மற்றும் காலியிடம் ஆகியவற்றின் அளவுகளை ஆய்வு செய்து கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதிகளை அப்புறப்படுத்துமாறு மேற்படி உணவு விடுதி உரிமதாரர்களுக்கு 29.03.2012 ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது

மேற்படி அறிவிப்பின் அடிப்படையில் உணவு விடுதி உரிமையாளர் கே.தர்மலிங்கம் என்பவர் தனது தன்னிலை விளக்கத்தில் மேற்படி உணவு விடுதி மற்றும் காலியிடம் ஆகியவற்றை பேரூராட்சி தீர்மானங்களின் அடிப்படையல் உரிய முறையில் ஒதுக்கீட பெற்றுள்ளதாகவும் இதில் தன்னால் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை எனவும் விளக்கம் அளித்துள்ளார் மேற்படி உரிமதாரரின் தன்னிலை விளக்கத்தினை ஏற்று உணவு விடுதி மற்றும் காலியிடத்தின் உரிமையினை புதுப்பிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் மூலம் மன்றத்திற்கு பொருள் வைக்கலாம் என ஆணையர் அவர்கள் உத்திரவு பிறப்பித்துள்ளார்.

மேற்படி உணவு விடுதியின் உரிமையாளர் திரு.கே.தர்மலிங்கம் தனது 12.09.2012 ம் தேதிய ஒப்புதல் கடிதத்தில் மேற்படி உணவு விடுதி வாடகை தொகையினை 50% உயர்வு செய்வதற்கு சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். ஆணையாளர் அவர்களின் உத்திரவின் அடிப்படையில் உரிமைதாரரின் கடிதத்தின் அடிப்படையிலும் மேற்படி கட்டிடம் மற்றும் காலியிடத்திற்கு 01.04.2012 முதல் 31.03.2015 வரை மூன்றாண்டுகளுக்கு முந்தைய வாடகையிலிருந்து 55% வாடகை உயர்வு செய்து கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உரிமம் புதுப்பிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 131 நாள் 22.10.2013ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | இனம் | உரிமம் முடிவடையும் காலம் | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | முந்தைய வாடகை | உயர்வு செய்யப்படும் மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | உணவு விடுதி கட்டிடம் | 31.03.2012 | 01.04.2012 முதல் 31.03.2015 வரை | ரூ 34650 | ரூ 53708 |
| 2 | காலியிடம் | 31.03.2012 | 01.04.2012 முதல் 31.03.2015 வரை | ரூ 4200 | ரூ 6510 |

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 250 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 131 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 43**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 காய்கடை மைதானம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு நான்காவது முறையாக நடைபெற்ற மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

பார்வை - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 114 நாள் 22.10.2013

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55ல் காய்கடை மைதானம் பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆறு கடைகளுக்கு நான்காவது முறையாக மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 30.08.2013ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 1 க்கு மட்டும் கீழ் குறிப்பிட்டுள்ள நபர்கள் ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை அளித்துள்ளனர்.

கடை எண் 1 (அரசு மதிப்பு ரூ.5750/- கடையின் அளவு 11 X 11)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 25.07.2013ம் தேதிய ஏலக் கோரிக்கை | 30.08.2013ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திரு. வீ. தீனதயாளன் | ரூ.16,000/- | ரூ.19,000/- |
| 2 | திரு.எஸ்.எஸ்.பாபு | ரூ.16,800/- (மறு ஏலம்) | ரூ.18,520/- (மின் ஏலம்) |

மேற்படி கடைக்கு திரு. வீ. தீனதயாளன் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.19000/-ஏலக் கோரிக்கை அளித்துள்ளார்

கடை எண் 2 (அரசு மதிப்பு ரூ.5750/- கடையின் அளவு 11 X 11)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 25.07.2013ம் தேதிய ஏலக் கோரிக்கை | 30.08.2013ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திரு. தூண்டி | ரூ.13,500/- | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை |

மேற்படி கடைக்கு 30.08.2013 நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே திரு.தூண்டி அவர்களின் 25.07.2013ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை ரூ.13,500 அடிப்படையில் கடையினை ஒதுக்கீடு செய்யவும் மேலும் கடை எண் 1க்கு திரு.தீனதயாளன் என்பவரின ஏலக் கோரிக்கையினை ஏற்று கடையினை ஒதுக்கீடு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 114 நாள் 22.10.2013ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 3043/2013/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 251 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 114 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 44

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54 மற்றும் 82-ல் உள்ள பேருந்து நிலையங்களில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட் நிறுவனத்திற்கு ''அம்மா மினரல் வாட்டர்'' விநியோகம் செய்ய இடம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக |
| பார்வை : | 1. மேலாண்மை இயக்குனர், தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட் அவர்களின் கடித நாள்.10.09.2013.<br>2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.101 நாள்.22.10.2013. |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54 மற்றும் 82-ல் உள்ள பேருந்து நிலையங்களில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட் நிறுவனத்திற்கு அம்மா மினரல் வாட்டர் விநியோகம் செய்ய இடம் ஒதுக்கீடு செய்து தரக்கோரி பார்வையில் காணும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண். | அமைவிடம் |
|---|---|---|
| 1 | 54 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (கிழக்கு பகுதி ) |
| 2 | 54 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் |
| 3 | 82 | உக்கடம் பேருந்து நிலையம் |

மேலும் ''அம்மா மினரல் வாட்டர்'' விநியோகம் செய்யும் இடத்திற்கு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் பெறப்பட்ட பொறியாளரின் அறிக்கைப்படி கீழ்கண்டவாறு மாதாந்திர நிலவாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | அமைவிடம் | மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்ப தொகை ரூ. | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 54 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (கிழக்கு பகுதி ) | 8 x6.2=49 | 55 | 2695/- |
| 2 | 54 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் | 8 x6.2=49 | 55 | 2695/- |
| 3 | 82 | உக்கடம் பேருந்து நிலையம் | 8 x6.2=48 | 15 | 720/- |

மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் ''அம்மா மினரல் வாட்டர்'' விநியோகம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.101 நாள்.22.10.2013-ன்படி மாதவாடகை ரூ.1000/- என நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.4363/13/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 252 நாள் 25.10.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 101 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 45

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.82 – பிரதான அலுவலகத்தில் புதியதாக அமைக்கப்பட இருக்கும் இந்தியன் வங்கி ATM மையம் அமைக்க அனுமதி வேண்டுவது தொடர்பாக

பார்வை : 1. உதவி பொறியாளர் குறிப்பு நாள்.16.08.2013
2. மாமன்ற தீமான எண்.170 நாள்.29.08.2013.
3. வ.வி.ம.நி.குழு தீர்மான எண். 133 நாளா.22.10.2013

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.82 மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் புதியதாக அமைக்கப்பட இருக்கும் இந்தியன் வங்கி ATM மையத்திற்கு பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் மாத வாடகை ரூ.6000/- என பார்வை 2-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் | அளவீடு (சதுரடி) |
|---|---|---|
| 1 | புதியதாக அமைக்கப்பட இருக்கும் இந்தியன் வங்கி ATM மையம் | 11.5x11.5 =132.25 |

மேற்படி ATM மையம் பிரதான அலுவலக வளாகத்தில் புதியதாக அமைக்க வரி வதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.133 நாள்.22.10.2013-ன் படி மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.4363 /2013 / அ1 (ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 253 நாள் 25.10.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 133 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 46

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.50-ல் - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ராஜீ ரோடு (மேற்கு) முதல் தளம் - புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண்.8-யை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

பார்வை : 1. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.05.10.2013.
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டத்தாள் தீர்மான எண்.95 நாள்.22.10.2013.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.51-ல் மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ராஜீ ரோடு (மேற்கு) முதல் தளம் பகுதியில் கடை எண். 8 புதியதாக கட்டப்பட்டுள்ளது.

மேற்படி புதியதாக கட்டப்பட்டுள்ள கடையை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப்பணித்துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.50-ல் ராஜீ ரோடு (மேற்கு) பகுதியில் முதல் தளத்தில் கடை எண்.8 | 161.46 | 28.45 | 4,595/- |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை, சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில், வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.95 நாள்.22.10.2013ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்ததுரை செய்து தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | ரூ.1,50,000/- |
| காப்புத்தொகை | ரூ. 50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | ரூ.1,50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | ரூ. 75,000/- |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்4363/2013/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 254 நாள் 25.10.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 95 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 47

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.25 மத்திய மண்டலத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் மாநகராட்சி வணிக வளாகத்தில் முதல் தளத்தில் கடை எண்.4, 5 மற்றும் 6-க்கு வாடகை செலுத்தாத காரணத்தால் 31.07.2013- அன்று மாநகராட்சியால் பூட்டப்பட்டது. - உரிமைதாரர்கள் செலுத்திய தொகையை பறிமுதல் செய்து மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - தொடர்பாக

பார்வை-
1. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 30.08.2013
2. மாமன்ற தீர்மான எண்.14 நாள்.27.04.2013
3. மாமன்ற தீர்மான எண்.268 நாள்.29.11.2012
4. வ.வி.ம.நி.குழு தீர்மான எண். 102 நாளஎ.22.10.2013

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.25 மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் மாநகராட்சி வணிக வளாகத்தில் முதல் தளத்தில் கடை எண்.4, 5 மற்றும் 6-க்கு வாடகை செலுத்தாத காரணத்தால் 31.07.2013- அன்று பூட்டப்பட்டது. உரிமதாரர் செலுத்திய தொகை விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடை எண்.4 திரு.A.மணிகண்டன் பார்வை-2ல் கண்ட மாமன்ற தீர்மான எண்.14, 27.04.2012-ன்படி, மாதவாடகை ரூ.15,000/-என்ற அடிப்படையில் ஒரு வருட முன்வாடகை தொகை ரூ.1,80,000/-, வைப்புத்தொகை ரூ.25,000/- மற்றும் ஒருவருட சேவைவரி 12.36% ரூ.22,248/- கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளார்.

| வ.எண். | இரசீது எண் | நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 201206182958 | 18.06.2012 | 25,000/- |
| 2 | 201206182964 | 18.06.2012 | 22,250/- |
| 3 | 201206182969 | 18.06.2012 | 80,000/- |
| 4 | 201206182971 | 18.06.2012 | 1,00,000/- |
| மொத்தம் | | | 2,27,250/- |

செலுத்தப்பட வேண்டிய நிலுவை த்தொகை கடை எண்.4 (உரிம எண்.2531812)-
ஜுலை 2012 முதல் ஜுலை 2013 வரை வாடகை நிலுவை
(ரூ.15000 x 9 – (மார்ச் 2013 வரை) &
(ரூ16854 x 4 – (ஜுலை 2013வரை ) =(135000+ 67416) ரூ.2,02,416/-
ஜுலை 2012 முதல் ஜுலை 2013 வரை அபராத வட்டி ரூ. 14,409/-
---------------------
ரூ.2,16,825/-
==========

கடை எண்.5 திரு.A.மணிகண்டன், பார்வை-2ல் கண்ட மாமன்ற தீர்மான எண்.14, 27.04.2012-ன்படி, மாதவாடகை ரூ.15,000/-என்ற அடிப்படையில் ஒரு வருட முன் வாடகை தொகை ரூ.1,80,000/-, வைப்புத்தொகை ரூ.25,000/- மற்றும் ஒருவருட சேவை வரி 12.36% ரூ.22,248/- கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளார்.

| வ.எண். | இரசீது எண் | நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 201206182976 | 18.06.2012 | 25,000/- |
| 2 | 201206182977 | 18.06.2012 | 22,250/- |
| 3 | 201206182972 | 18.06.2012 | 80,000/- |
| 4 | 201206182975 | 18.06.2012 | 1,00,000/- |
| மொத்தம் | | | 2,27,250/- |

செலுத்தப்பட வேண்டிய நிலுவை த்தொகை கடை எண்.5 (உரிம எண்.2531813)-
ஜுலை 2012 முதல் ஜுலை 2013 வரை வாடகை நிலுவை
(ரூ.15000 x 9 – (மார்ச் 2013 வரை) &
(ரூ16854 x 4 – (ஜுலை 2013வரை ) =(135000+ 67416) ரூ.2,02,416/-
ஜுலை 2012 முதல் ஜுலை 2013 வரை அபாராத வட்டி ரூ. 14,409/-
---------------------
ரூ.2,16,825/-
==========

கடை எண்.6 திரு.I.சலீம், பார்வை-2ல் கண்ட மாமன்ற தீர்மான எண்.268, 29.11.2012-ன்படி மாதவாடகை ரூ.17,100/-என்ற அடிப்படையில் ஒரு வருட வாடகை தொகை ரூ.2,05,200/-, வைப்புத்தொகை ரூ.25,000/- மற்றும் ஒருவருட சேவை வரி 12.36% ரூ.25,363/- சேர்த்து கீழ் கண்டவாறு செலுத்தியுள்ளார்.

| வ.எண். | இரசீது எண் | நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 201211022519 | 02.11.2012 | 1,00,000/- |
| 2 | 201212124019 | 12.12.2012 | 1,30,637/- |
| 3 | 201212124022 | 12.12.2012 | 25,363/- |
| மொத்தம் | | | 2,56,000/- |

செலுத்தப்பட வேண்டிய நிலுவை த்தொகை கடை எண்.6 (உரிம எண்.2531814)-
நவம்பர் 2012 முதல் ஜுலை 2013 வரை வாடகை நிலுவை

| | |
|---|---|
| (ரூ.17100 x 5 (மார்ச் 2013 வரை) & (19214 x 4(ஜுலை 2013வரை) =(85500+ 76856) | ரூ.1,62,356/- |
| நவம்பர் 2012 முதல் ஜுலை 2013 வரை அபாராத வட்டி | ரூ. 7,396/- |
| | ரூ.1,69,752/- |

உரிம கட்டண நிலுவை செலுத்தக் கோரி இவ்வலுவலக அறிவிப்புகள் வாயிலாகவும் நேரிலும் பலமுறை நினைவூட்டப்பட்டும் நிலுவைத் தொகை ஏதும் செலுத்தப்படாததால் மாநகராட்சியால் 31.07.2013 அன்று பூட்டப்பட்டது.

எனவே குத்தகைதாரர்களான திரு.A.மணிகண்டன் மற்றும் திரு.I.சலீம் என்பவருக்கு பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி 31.03.2015 வரையிலான மூன்றாண்டுகளுக்கு உரிம உத்திரவினை ரத்து செய்யவும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட்ட அனைத்துத் தொகைகளையும் பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவு வைக்கவும், மேற்படி கடைகளை மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய செய்தித்தாளில் விளம்பர செய்தமைக்கு முன்அனுமதி வேண்டியும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில். வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.102 நாள்.22.10.2013ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்ததுரை செய்து தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/10/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 255 நாள் 25.10.2013

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 102 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 48

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.25 மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் மாநகராட்சி வணிக வளாகத்தில் தரைதளத்தில் கடை எண்.2-க்கு வாடகை செலுத்தாத காரணத்தால் 31.07.2013- அன்று மாநகராட்சியால் பூட்டப்பட்டது. - உரிமைதாரர்கள் செலுத்திய தொகையை பறிமுதல் செய்து மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - தொடர்பாக

பார்வை-
1. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.16.09.2013
2. மாமன்ற தீர்மான எண்.14 நாளா.27.04.2013
3. வ.வி.ம.நி.குழு தீர்மான எண். 104 நாளா.22.10.2013

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.25 மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் மாநகராட்சி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண்.2-க்கு உரிம கட்டண நிலுவை செலுத்தக் கோரி இவ்வலுவலக அறிவிப்புகள் வாயிலாகவும் நேரிலும் பலமுறை நினைவூட்டப்பட்டும் நிலுவைத் தொகை ஏதும் செலுத்தப்படாததால் மாநகராட்சியால் 31,07.2013 அன்று பூட்டப்பட்டது. உரிமதாரர் செலுத்திய தொகை விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடை எண்.2 திரு.K.வேதேஸ்வரன் பார்வை-2ல் கண்ட மாமன்ற தீர்மான எண்.14, நாள் 27.04.2012-ன்படி, மாதவாடகை ரூ.60,000/-என்ற அடிப்படையில் ஒரு வருட முன் வாடகை தொகை ரூ.7,20,000/-,வைப்புத்தொகை ரூ.25,000/- மற்றும் ஒருவருட சேவை வரி 12.36% ரூ.88992/- கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளார்.

| வ.எண். | இரசீது எண் | நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 201208162683 | 16.08.2012 | 25,000/- |
| 2 | 201208162686 | 16.08.2012 | 6,20,000/- |
| 3 | 201208162715 | 16.08.2012 | 1,00,000/- |
| 4 | 201208162690 | 16.08.2012 | 88,992/- |
| மொத்தம் | | | 8,33,992/- |

கடை எண்.2 (உரிம எண்.2531810) செலுத்தப்பட வேண்டிய நிலுவை த்தொகை
மே 2012 முதல் ஜுலை 2013 வரை வாடகை,
அபராத வட்டி மற்றும் சேவை வரி நிலுவை ரூ.8,32,400/-
--------------------
ரூ.8,32,400/-
==========

எனவே குத்தகைதாரரான திரு.K.வேதேஸ்வரன் என்பவருக்கு பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி 31.03.2015 வரையிலான மூன்றாண்டுகளுக்கு உரிம உத்திரவினை ரத்து செய்யவும் குத்தகைதாரர் செலுத்தப்பட்ட அனைத்துத் தொகைகளையும் பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவுவைக்கவும், மேற்படி கடைகளை மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் பொருள் வைக்கப்பட்டதில். வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.104 நாள்.22.10.2013ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்ததுரை செய்து தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/10/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 256 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 104 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் 49**

**பொருள்** : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 செங்காடு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு நடைபெற்ற நான்காவது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - தொடர்பாக

**பார்வை** : வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் 01.10.2013

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55ல் செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆறு கடைகளில் எற்கனவே ஒதுக்கிடு செய்யப்பட்ட கடை எண் 1 மற்றும் 2 போக மீதமுள்ள 4 கடைகளுக்கு நான்காவது முறையாக மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 30.08.2013ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 3 க்கு மட்டும் கீழ குறிப்பிட்டுள்ள நபர்கள் ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். மீதமுள்ள கடைகளுக்கு ஒருவரும் ஏலத்தொகை செலுத்தப்படவில்லை.

மேற்படி ஏலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

**கடை எண் 3** (அரசு மதிப்பு ரூ.6700/- கடையின் அளவு 21 X 11)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 25.07.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை | 30.08.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.மோகன்குமார் | - | ரூ.9,009/- |
| 2 | திரு.என்.ரஞ்சித்குமார் | ரூ.6,000/- | ரூ.8,002/- |
| 3 | திரு.பி.ராஜா | - | ரூ.9,100/- |

மேற்படி திரு.பி.ராஜா என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.9,100/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

மேற்படி ஏலக்கோரிக்கையினை ஏற்று கடையினை ஒதுக்கீடு செய்யவும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று கடையினை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் பின்னேற்புக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 3043/2013/அ1(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 257 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 50**

| | |
|---|---|
| **பொருள்:** | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம், வார்டு எண்.57, உப்பிலிபாளையம் கிராமம் க.ச.எண்.75/3 மற்றும் 76/3 இட்டேரி புறம்போக்கு பகுதியில் வீட்டு மனை பட்டா வழங்க ஆட்சேபனையின்மை தெரிவித்தல் – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக. |
| **பார்வை:** | 1. மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.15888/2005/ஆ1, நாள்.16.07.2012.<br>2. மேற்பார்வை பொறியாளர், கோவை மின் பகிர்மான வட்டம் அவர்களின் க.எண்.மேபொ /மா /கோமிபவ /உசெகொ /மதொஅ / உ.பொ/கோ.மனு அ எண்.938/2013, நாள்.06.09.2013. |

பார்வை 1ல் கண்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம், உப்பிலிபாளையம் கிராமம், க.ச.எண்.75/3, 76/3 இட்டேரி புறம்போக்கு காலையில் வீடு கட்டி வசித்து வரும் திருமதி.காளியம்மாள் மற்றும் 18 நபர்களுக்கு அரசாணை எண்.172, வருவாய் துறை நாள்.23.05.2013ன்படி மேற்படி நபர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை மற்றும் தீர்மானத்தை பெற்று அனுப்பி வைக்குமாறு ஆணையர் அவர்களை கேட்டு கொண்டுள்ளார். மேற்காண் பொருள் தொடர்பாக மொத்தம் 18 நபர்களின் குடியிருப்புகளில் 3 குடியிருப்புகள் உயர் அழுத்த மின் கம்பிகள் செல்வதால் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கண்நோக்கில் தடையின்மை சான்று கோரப்பட்டது.

மேற்பார்வை பொறியாளர், கோவை பகிர்மான வட்டம் அவர்களின் பார்வை 2ல் காண் கடிதத்தில், திருமதி.எஸ்.பி.காளியம்மாள் மற்றும் மூவர் குடியிருக்கும் ஓட்டுவில்லை வீட்டின் மீது 11 கே.வி. உயர்மின் அழுத்த கம்பியானது செங்குத்தாக (13 அடி இடைவெளி) போதிய இடைவெளி உள்ளதாலும், பாதுகாப்பு வளையம் (Guarding Arrangement) அமைக்கப்பட உள்ளதாலும் மேற்படி 3 வீடுகளுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என தெரிவித்துள்ளதன் பேரில் விதிகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு மாநகராட்சியின் ஆட்சேபணையின்மை தெரிவிக்க 30.09.2013ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன் அனுமதி வழங்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- மாமன்றத்தின் அனுமதிக்கு. ந.க.எண்.8327 /2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 258 நாள் 25.10.2013**

பொருளுக்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 51**

| | |
|---|---|
| **பொருள்:** | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு - அவினாசி சாலை, திருச்சி சாலை மற்றும் மேட்டுப்பாளையம் சாலைகளில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரித்து அரசுக்கு பிரேரணை அனுப்புதல் மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் துறை, நெடுஞ்சாலைத் துறையை கேட்டு கொள்ளுதல் – தொடர்பாக. |

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் வளர்ந்து வரும் சாலை போக்குவரத்தினால் காலை மற்றும் மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் கீழ்கண்ட சாலை சந்திப்புகளை கடப்பதற்கு மிகவும் கால தாமதம் ஏற்படுகிறது. போக்குவரத்து நெரிசலினையும், கால நேரத்தினை குறைப்பதற்கு இம்மாநகராட்சி பகுதியில் உள்ள பிரதான சாலைகளான அவினாசி சாலை, மேட்டுப்பாளையம் சாலை, திருச்சி சாலை ஆகிய இடங்களில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே,

1. அவினாசி சாலை லட்சுமி மில் சந்திப்பில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கவும்,
2. நஞ்சுண்டாபுரம் ராமநாதபுரம் சந்திப்பில் திருச்சி சாலையில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கவும்,
3. மேட்டுப்பாளையம் சாலையில் சாய்பாபா கோவில் அருகில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கவும்,
4. அவினாசி சாலை – ஹோப் காலேஜ் அருகில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்கவும்,
5. தற்போதுள்ள அவினாசி ரோடு மேம்பாலம் விரிவுபடுத்தவும்,
6. ஏர்போர்ட் - காளப்பட்டி சந்திப்பில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கவும்,

இதற்கான விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்து இத்திட்டத்தினை விரைவில் நிறைவேற்ற அரசுக்கு பிரேரணை அனுப்பவும், சம்பந்தப்பட்ட தேசிய நெடுஞ்சாலைத் துறை மற்றும் நெடுஞ்சாலை துறையை கேட்டுக் கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண். 10619 /2013/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 259 நாள் 25.10.2013**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு இடங்களுடன், சத்தி சாலையையும் (சரவணம்பட்டி – துடியலூர் சந்திப்பு ) சேர்த்து பிரேரனை அனுப்ப அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 52

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2013-16-க்கான வணிக வளாகங்களுக்கு - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.9.2013-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது மாமன்றத்திற்கு பொருள் வைப்பது - தொடர்பாக.

பார்வை :
1. பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.24.9.2013.
2. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள். 03.10.2013
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான.எண்.111நாள்.22.10.2013

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் புதிய வணிகவளாக கடைகளுக்கு 2013-16-ம் ஆண்டு வரையிலான மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 24.9.2013-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

ஏலம் நடைபெற்ற தேதி – 24.9.2013

1. வார்டு எண். 23ல் சர்சண்முகம் சாலையில் புதிதாக கட்டப்பட்ட 160 சதுரடி (10 x 16) அளவுள்ள கடைகள்

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | முதல் ஏலம் | இரண்டாவது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| | கடை எண்.3 | 12200 | K.K.சஜீவன்<br>B.சுரேஷ்குமார் | | -<br>- | 16000<br>13100 | 16000 |
| | கடை எண்.4 | 12400 | K.K.சஜீவன்<br>B.சுரேஷ்குமார் | | -<br>- | 16000<br>13200 | 16000 |
| | கடை எண்.8 | 16800 | M.கணேஷன்<br>ஜோதிகுமர்லால் கிட்வாணி<br>D.சுந்தரமூர்த்தி<br>P.ரமேஷ். | | 16900<br>-<br>-<br>- | 14500<br>15100<br>14600<br>13800 | 16900 |

2. வார்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட 160 சதுரடி (10 x 16) அளவுள்ள கடைகள்

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | முதல் ஏலம் | இரண்டாவது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| | கடை எண்.39 | 13100 | S.ஜமுனா<br>R.அருண்குமார்<br>K.தனபால் | - | 19750<br>-<br>- | 17500<br>13330<br>13300 | 19750 |
| | கடை எண்.40 | 13100 | S.இந்திரா<br>K.தனபால்<br>S.K.வசந்த்<br>ராஜ்குமார் | | 19700 | 20000<br>13300<br>10301<br>10000 | 20000 |

எனவே, மேற்படி வணிகவளாக கடைகளின் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.111 நாள் 22.10.2013-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.12794/2012/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 260 நாள் 25.10.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 111 நாள் 22.10.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 53**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி சுவர்ண ஜெயந்தி திட்டம் - நகர்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் 2012-13 தேர்வு செய்யப்பட்ட தகுதியுடைய பயனாளிகளின் பெயரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்ப்பது –தொடர்பாக.

------------

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி 2012-2013 - ம் ஆண்டிற்கு STEP-UP பயிற்சி அளித்தல் தொடர்பாக 29.08.2013, 30.08.2013 ஆகிய இரண்டு நாட்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளை தேர்வு செய்வது தொடர்பாக அனைத்து மண்டல அலுவலகங்களிலும் முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்கள் மூலமாக பயனாளிகளை கண்டறிந்து விண்ணப்பங்கள் சேகரித்ததில் 1849 விண்ணப்பங்கள் BPL பட்டியலில் இடம் பெறவில்லை. எனவே மேற்கண்ட நபர்கள் பயன் பெறும் வகையில் 2012–2013 ம் ஆண்டிற்கான STEP –UP பயிற்சி வழங்க ஏதுவாக 1849 நபர்களை BPL பட்டியலில் சேர்க்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண்.6100/2012/எம்.இ.6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 261 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 54**

| | |
|---|---|
| பொருள்: | உதவித் தொகை – கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக. |

கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் முதியோர் ஓய்வூதியம் / விதவை உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரனை செய்து 7 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்கள் உதவித்தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் தெற்கு அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களில், மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய 7 பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 3685 /2012/எம். இ .6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 262 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 55

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு சிவானந்தா காலனி வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சா் அவா்களின் பண்ணை பசுமை காய்கறித் திட்டத்தினை செயல்படுத்த பண்ணை பசுமை நுகா்வோா் கடைகள் மூலம் ஆரம்பிக்க இலவசமாக இடம் ஒதுக்கீடு செய்வது - தொடா்பாக

பாா்வை :
1. கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளா், கூட்டுறவு துறை, கோவை மண்டலம் அவா்களின் கடித நாள்.13.09.2013.
2. வ.வி.ம.நி.குழு தீா்மான எண். 129 நாளஎ.22.10.2013

----------

பாா்வையில் காணும் கடிதத்தின்படி கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு சிவானந்தா காலனி பகுதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சா் அவா்களின் "பண்ணை பசுமை காய்கறித் திட்டத்தினை பண்ணை பசுமை நுகா்வோா் கடைகள் (Farm Fresh Consumer Outlets)" மூலம் விரைவில் ஆரம்பிக்க 10 x 16 சதுரடி அளவுள்ள கட்டிடமோ அல்லது காலி மனையோ இலவசமாக இடம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளனா்.

மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு சிவானந்தா காலனி மாநகராட்சி வணிக வளாகத்தில் 160 சதுரடி (16 x10) அளவுள்ள கடைகாலியாக உள்ளது. இக்கடைக்கு அரசு மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகை ரூ.4610/- என நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி வளாகத்தில் காலியாக உள்ள கடை எண்.5யினை மாண்புமிகு தமிழக முதலமைச்சா் அவா்களின் "பண்ணை பசுமை காய்கறித் திட்டத்தினை செயல்படுத்த பண்ணை பசுமை நுகா்வோா் கடைக்கு (Farm Fresh Consumer Outlets)" வாடகை நிா்ணயம் செய்வது குறித்து முடிவு செய்ய வரி வதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.129 நாள்.22.10.2013-ன் படி மாதவாடகை ரூ.2500/- என நிா்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பாிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை தொடா்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4363/13/அ1(ம)

## மாநகர மன்ற தீா்மானம் எண் 263 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 56

**பொருள்:** கோயம்புத்தூா் மாநகராட்சி – நகரமைப்பு – உதவி நகரமைப்பு அலுவலா்களுக்கு உதவியாக 5 வாா்டுக்கு ஒரு நபா் வீதம் தொழில் நுட்ப உதவியாளா் ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பது – நகரமைப்பு பிரிவில் கட்டிட அனுமதி பணிகளுக்கும் நிா்வாக பணிகளுக்கும் கணிணி பயிற்சி பெற்ற தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு தெரிந்த நபா்களை நியமனம் செய்தல் – மாமன்றத்திற்கு பொருள் சமா்ப்பித்தல் – தொடா்பாக.

*******

கோயம்புத்தூா் மாநகராட்சி, நகரமைப்பு பிரிவு, உதவி நகரமைப்பு அலுவலா்கள் ஒவ்வொருவருக்கும் 20 வாா்டுகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவா்களின் பணிகளை அந்தந்த அலுவலா்களே எவ்வித உதவியாளா்கள் இன்றி பணியாற்றி வருவதால், நகரமைப்பு பிரிவின் பணிகள் காலதாமதம் ஆகிறது. மேலும் அனுமதியற்ற கட்டிடங்களை கண்டறிந்து அறிக்கை சமா்ப்பித்தல், அதன் மீது எவ்வித தொடா் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதாலும், அனுமதி பெற்ற கட்டிடங்கள் விதிமீறல் உள்ளதை அளவீடு செய்யவும், மேலும் நீதிமன்ற வழக்குகள் சம்பந்தமான கோப்புகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும், ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளும் போது உதவியாளா்களின்றி மிகவும் சிரமமாக உள்ளதால் உதவி நகரமைப்பு அலுவலா்களுக்கு தொழில் நுட்ப உதவியாளா்களை 5 வாா்டுக்கு ஒரு நபா் வீதம் ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பது அவசர அவசியமாகிறது.

மேலும், நகரமைப்பு பிரிவில் தற்போது கட்டிட அனுமதி வழங்குவதற்கான கட்டிட விகிதங்கள் 01.10.2013 முதல் உயா்த்தி மாற்றியமைக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. எனவே, நகரமைப்பு பிரிவு மூலமாக அனுமதியளிக்கப்படும் வரைபடங்களை மாநகராட்சி மூலம் (Print) நகல் எடுத்து கொடுக்க பிாிண்டா் ஆப்பரேட்டா் மற்றும் படவரைவாளா்கள் தேவைப்படுவதாலும் நிா்வாகப் பணிக்கு கணிணி பயிற்சி பெற்ற தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு தெரிந்த நபா்களை நியமனம் செய்யவும் மண்டல வாாியாக ஒப்பந்தப் புள்ளி கோாி நடவடிக்கை எடுக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண். /2013/எம்.எச்.5

## மாநகர மன்ற தீா்மானம் எண் 264 நாள் 25.10.2013

பொருளை அனுமதித்து அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 57

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் நிதி 2012-2013 | | | | | | |
| 1. | 373/ 2012/ எம் டி5 | வார்டு எண் 22- காமராஜபுரம் பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மைய கட்டிடம் கட்டுதல் | 5.00 | 10.09.2013 மூன்றாம் அழைப்பு | திருமதி. கே. ரேணுகா தேவி கோயம்புத்தூர் 4.83% அதிகம். | திருமதி. கே. ரேணுகா தேவி கோயம்புத்தூர் 4.83% அதிகம். |
| பள்ளி கழிப்பிடம் | | | | | | |
| 2. | 3967/ 2013/ எம் டி5 | வார்டு எண் 23- எஸ்.ஆர்.பி. அம்மணியம்மாள் பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் கூடுதல் கழிப்பிடம் கட்டுதல் | 35.00 | 3-10-2013 இரண்டாம் அழைப்பு | 1) திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 1.68% அதிகம் 2) திரு.கே. கோவிந்தராஜ் 5.20% அதிகம். | திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 1.68% அதிகம் |
| பாராளுமன்ற உறுப்பினர் நிதி 2012-2013 | | | | | | |
| 3. | 1348/ 2013/ எம் டி5 | வார்டு எண் 58 நீலிக்கோணாம் பாளையம் பேச்சியம்மன் கோயில் மைதானம் முன்பு சமுதாய கூடம் கட்டுதல் | 24.90 | 18-9-2013 ஐந்தாம் அழைப்பு | தி/வா. என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 4.96 % அதிகம் | தி/ வா. என். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 4.96 % அதிகம் |
| பொது நிதி | | | | | | |
| 4. | 8094 / 2012/ எம் டி2 | வார்டு எண் 44- ராமசாமி நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் ஆர்.சி.சி. தரைமட்ட தொட்டி கட்டுதல் | 25.90 | 12.09-2013 ஐந்தாம் அழைப்பு | 1)தி /வா என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.88% அதிகம். 2)திருமதி. கே.பங்கஜம் கோயம்புத்தூர் 21.81% அதிகம். | தி / வா என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.88% அதிகம். |
| 5. | 11375 / 2012/ எம் டி2 | வார்டு எண் -84 கெம்பட்டி காலனி பகுதியில் கடைகள் கட்டுதல் | 9.05 | 18-9-2013 நான்காம் அழைப்பு | திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 4.99% அதிகம். | திரு.என். குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 4.99% அதிகம் |
| 6. | 4697 / 2013/ எம் டி2 | வார்டு எண் -31 விளாங்குறிச்சி சாலை பத்திர பதிவு அலுவலகம் அருகில் வணிகவளாகம் கட்டுதல் | 45.00 | 3-10-2013 இரண்டாம் அழைப்பு | திரு.கே. கோவிந்தராஜ் 4.94% அதிகம் | திரு.கே. கோவிந்தராஜ் 4.94% அதிகம் |
| 7. | 15167 / 2012/ எம் டி2 | வார்டு எண் -38 பௌண்ட் ரோடு வி.கே.ரோடு சந்திப்பில் கடைகள் கட்டுதல் | 9.15 | 1-10-2013 முதல் அழைப்பு | 1)தி /வா. என்.பி.கே அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.64% அதிகம் 2) தி /வா. பூஜா இன்ஜினியரிங் கோயம்புத்தூர் 17.58% அதிகம் | தி /வா. என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.49% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 5280 / 2013/ எம் டி2 | வார்டு எண் -23 மேற்கு திருவேங்கடசாமி சாலையில; கூடுதல் வணிகவளாக கடைகள் கட்டுதல் | 22.00 | 3-10-2013 முதல் அழைப்பு | 1)திருமதி. கே. பங்கஜம் கோயம்புத்தூர் 22.43% அதிகம் 2) தி /வா. என்.பி.கே அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.70% அதிகம் | தி /வா. என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.49% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 9 | 5988 / 2013/ எம் டி2 | வார்டு எண் -80 தியாகி குமரன் சாலையில் வணிகவளாக கடைகள் கட்டுதல் | 33.50 | 8-7-2013 மூன்றாம் அழைப்பு | திரு.கே. கோவிந்தராஜ் 4.98% அதிகம் | திரு.கே. கோவிந்தராஜ் 4.98% அதிகம் |
| 10 | 5450 / 2013/ எம் சி1 | கோயம்புத்துா் மாநகராட்சி வளா்ச்சி பணிகள் நடைபெறுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ,தொழில் நுட்ப உதவியாளா்கள் அமா்த்துதல் | 18.00 | 3.10.2013 முதல் அழைப்பு | 1)தி/வா. கே.சி.பி. இன்ஜினியா்ஸ் பிரைவேட் லிமிடெட் 4.98 % அதிகம் 2) தி/வா. வரதன் இன்ப்ராஸ்ட்ரக்சா் 5.00 % அதிகம் | தி/வா. கே.சி.பி. இன்ஜினியா்ஸ் பிரைவேட் லிமிடெட 4.80 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண். 373/2013 எம் டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 265 நாள் 25.10.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 58

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு நகர்புர வளர்ச்சி திட்டம் (IUDM) சாலைப் பணிகளுக்கு 4 சிப்பங்களின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை :
1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல்துறை அரசாணை எண்.G.O(D)492 நாள் 19/09/2013
2. மாமன்றத் தீர்மான எண். 102 நாள் 24/07/2013

.........................

மேற்காண் பார்வை 2–ல் கண்ட மாமன்றத் தீர்மானத்தின்படி கீழ்க்கண்ட சாலைகளில் தார்தளம் அமைக்க சிப்பம் 1 முதல் 4 பணிகளுக்கு கடந்த 13/09/2013ல் உறை/மின்னனு முறைகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரா்கள் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளார்கள். அதன் விபரம் பின்வருமாறு:-

சிப்பம்–1 (ந.க.எண்.10318/2013/எம்.டி.4)

| வ. எண். 1 | வேலையின் பெயர் 2 | மதிப்பீட்டுத் தொகை (ரூலட்சத் தில்) 3 | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 4 | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரா் 5 | விலைக் குறைப்பிற்கு பின் மதிப்பீட்டிற்கு 6 |
|---|---|---|---|---|---|
| 1 | கிழக்குமண்டலம், வார்டு எண்.34, வீரியம்பாளையம் சாலையில் இருந்து நேரு நகர் சந்திப்பு மற்றும் இளங்கோ நகர் சந்திப்பு வரைதார் சாலை அமைத்தல் | 50.00 | 1. தி/ள் ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.91% அதிகம் 2.திரு. அம்மாசையப்பன் 5.83% அதிகம் | தி/ள் ஜெயம் கன்ஸ்ட்ரக் சன்ஸ் | தி/ள் ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.18%குறைவு |

சிப்பம்–2 (ந.க.எண்.8229/2013/எம்.டி.4)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | மேற்கு மண்டலம், வார்டு எண்.6, ராஜப்பாநகர் பிரதான சாலை, கவுண்டம்பானளயம் தார் சாலை அமைத்தல் | 50.00 | 1.தி/ள்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் 4.98% அதிகம் 2.தி/ள்விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரச்சர் தொழில் நுட்ப தகுதி இல்லை | தி/ள்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் | தி/ள்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் 0.02% குறைவு |

சிப்பம்–3 (ந.க.எண்.9010/2013/எம்.டி.4)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | வடக்கு மண்டலம், வார்டு எண்.28, நமச்சிவாயம் நகர், சரவணம்பட்டி கோயம்புத்தூர் தார் சாலை அமைத்தல் | 57.60 | 1. திரு.எம். துரைசாமி 4.71% அதிகம் 2. தி/ள் .பி. மல்லையன் பில்டர்ஸ் 8.23% அதிகம் | திரு.எம். துரைசாமி | திரு.எம். துரைசாமி 0.01% குறைவு |

சிப்பம்–4 (ந.க.எண்.8767/2013/எம்.டி.4)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | தெற்கு மண்டலம், வார்டு எண்.88, ஜே.ஜே.நகர் பிரதான சாலை, அரசு குடியிருப்பு காலனி பிரதான சாலை, தார் சாலை அமைத்தல் | 50.00 | 1.தி/ள் சரவணா கன்ஸ்ட்ரக்சன் 0.41%குறைவு 2. தி/ள் .பி. மல்லையன் பில்டர்ஸ் 3.58%அதிகம் | தி/ள் சரவணா கன்ஸ்ட்ரக்சன் | தி/ள் சரவணா கன்ஸ்ட்ரக்சன் 0.41%குறைவு |

அட்டவணை களம் 5–ல் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைக்க கோரியதில் அட்டவணை களம் 6–ல் உள்ளபடி விலைக்குறைப்பு செய்து கொடுத்துள்ளார்கள். எனவே அரசாணையின் படி இப்பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு :</u> அனுமதிக்கலாம். ந.க.எண்.10897/2013/ எம்.டி.4

## மாநகர மன்ற தீர்மானம் எண் 266 நாள் 25.10.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி